## (உ) அரசாங்க நிதி

### பகுதி அ—நிதி ஆண்டு 1965/66

ஒற்ரூேபர் 1965 முதல் செத்தெம்பர் 1966 வரையுள்ள நிதியாண்டிற்கான இலங்கை அரசாங்கத்தின் நிதி இயக்கங்கள், முந்தைய நிதி வருடங்களுக்கானவற்றுடன் தொடர்பான விதத்திற் கீழ்த் தொடரும் அட்டவணை II (உ) 1 இற் சுருக்கித் தரப்பட் டுள்ளன. மேற்படி அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளவாறு 1965/66 நிதியாண்டின் போதான அரசாங்க நிதி இயக்கங்களின் முக்கிய அம்சங்களாவன பின்வருமாறு:—

(அ) 1963/64 இலும், 1964/65 இலும் முறையே ரூ. 1,7590 இலட்சமாகவும், ரூ. 1,8164 இலட்சமாகவும் அமைந்த மொத்த அரசிறை ரூ. 1,8332 இலட்சமாக இருந்தது.

(ஆ) 1963/64 இலும், 1964/65 இலும் முறையே ரூ. 22366 இலட்சமாகவும், ரூ. 22746 இலட்சமாகவும் அமைந்த மொத்த வாக்களிக்கப்பட்ட செலவு(1) ரூ. 23882 இலட்சமாக இருந்தது. இம் மொத்தச் செலவில் 1963/64 ஆம், 1964/65ஆம் ஆண்டுகளில் முறையே ரூ. 18341 இலட்சமாகவும், ரூ. 18034 இலட்சமாகவும் அமைந்திருந்த மீண்டுவரும் செலவு ரூ. 18605 இலட்சமாக இருக்க 1963/64ஆம், 1964/65ஆம் ஆண்டுகளில் முறையே ரூ. 4025 இலட்சமாகவும், ரூ. 4712 இலட்சமாகவும் அமைந்த மூலதன வாக்குப் பணங்களி லிருந்து அறவிடக்கூடிய செலவானது ரூ. 5277 இலட்சமாக இருந்தது.

(இ) முற்பணக் கணக்குகளின் பேரிலான இயக்கங்களின் விளைவாக 1963/64ஆம், 1964/65ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட முறையே ரூ. 161 இலட்சமும், ரூ. 279 இலட்சமும் கொண்ட தேறிய வரவுகளுடன் ஒப்பிடுகையில் இவ்விளைவு ரூ. 112 இலட்சம் கொண்ட தேறிய கொடுப்பனவாக அமைந்தது.

(ஈ) இவ்வியக்கங்களின் விளைவாக ஏற்பட்ட தேறிய பணக்குறை ரூ. 5659 இலட்ச மாகும். ஒப்பியல்பாக 1963/64 ஆம், 1964/65 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட தேறிய பணக் குறைகள் ரூ. 4617 இலட்சமாகவும் ரூ. 4304 இலட்சமாகவும் உள்ளன.

(உ) இத்தேறிய பணக் குறைக்கு நிதியீட்டுவதற்கென அரசாங்கம் உள்நாட்டு மூலங் களிலிருந்து ரூ. 4182 இலட்சம் கடன் பெற்றும், உள்நாட்டுச் சந்தையல்லா மூலங்களி லிருந்து ரூ. 1121 இலட்சம் பெற்றும், அந்நிய நிதி மூலம் ரூ. 1180 இலட்சம் பெற்றும் உள்ளது. அந்நிதியின் ஒரு பங்கு (ரூ. 824 இலட்சம்) பொருளுதவி இணைக்கிணை நிதிகளை உள்ளடக்கிய பணமிச்சங்களைப் பலப்படுத்தப் பயன்படுத்தப்பட்டது.

(ஊ) தேறிய பணக்குறையினால் விளைந்த நாணய விரிவுத் தாக்கத்தை ஐக்கிய அமெ ரிக்க உதவிகளினால் எழுந்த இணைக்கிணை உள்ளூர் நிதிகளில் ஏற்பட்ட மாற்றத்திற்கு இடம் விட்டுக் கணிப்பின், அது ரூ. 1224 இலட்சமாக உள்ளது. ஒப்பியல்பாக இத்தொகை 1963/64, 1964/65ஆம் ஆண்டுகளில் முறையே ரூ. 1629 இலட்சமாகவும், ரூ. 347 இலட்ச மாகவும் உள்ளது.

### அரசிறை

பின்னிணைப்பு IIஇல் உள்ள 19ம் அட்டவணையிலே அரசாங்க மதிப்பீடுகளி லுள்ள பிரதான அரசிறைத் தலைப்புகளின் கீழ் உள்ளபடியான 1965/66ம் ஆண்டின் மூல மதிப்பீடுகளும், உண்மையாகக் கிடைத்த (தற்காலிக) அரசிறையும் 1964/65ம் ஆண்டிற் குரிய உண்மையாகச் சேகரித்த அரசிறையுடன் இணைத்துக் காட்டப்பட்டுள்ளன. 1965/66ம்

(1) அட்டவணை II [உ] 1இலுள்ள விடயங்களாகிய 1 [ஆ] 1, 1 [ஆ] 2 இன் கீழுள்ள தொகைகளின் மொத்தத்தைப் பிரதிபலிக்கின்றது.

**பண மிகை/குறை (—)**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| 1959/60 | 1960/61 (ஐ) | 1961/62 | 1962/63 | 1963/64 | 1964/65 | 1965/66 (ஓ) |
|---|---|---|---|---|---|---|
| – 417·5 | – 462·5 | – 456·1 | – 391·7 | – 461·7 | – 430·4 | – 565·9 |
| 1,403·8 | 1,513·9 | 1,620·6(ஒ) | 1,593·4(ஒ) | 1,759·0(ஒ) | 1,816·4(ஒ) | 1,833·2(ஒ) |
| –1,821·3 | –1,976·4 | –2,076·6 | –1,985·3 | –2,220·7 | –2,246·8 | –2,399·4 |
| –1,511·9 | –1,540·8(ஏ) | –1,580·7(ஏ) | –1,596·4(ஏ) | –1,834·1(ஏ) | –1,803·4(ஏ) | –1,860·5(ஏ) |
| – 306·6 | – 419·9 | – 480·6 | – 402·3 | – 402·5 | – 471·2 | – 527·7 |
| – 1·5 | – 1·5 | – 0·7 | – 0·3 | – 0·2 | 0·1 | ... |
| – 7·1 | 1·9 | 2·4 | – 8·6 | – 5·2 | 2·7 | – 15·5 |
| 5·8 | – 15·9 | 10·2 | 7·6 | – 45·9 | 97·9 | 11·3 |
| | | – 26·0 | 20·3 | 61·0 | – 70·4 | – 6·6 |
| — | – 0·2 | – 1·2 | – 5·6 | 6·2 | – 2·3 | – 0·4 |
| 411·6 | 462·5 | 496·3 | 391·3 | 416·3 | 410·9 | 648·3 |
| 57·4 | 29·4 | 104·5 | – 33·8 | – 1·9 | 50·3 | 112·1 |
| 49·8 | – 2·9 | 11·9 | – 0·4 | – 17·2 | – 8·6 | 41·7 |
| 13·0 | 39·4 | 86·5 | – 27·6 | 17·4 | 68·2 | 76·5 |
| 2·7 | – 1·0 | 4·8 | 0·1 | 2·5 | – 3·1 | 0·2 |
| – 7·6 | – 6·1 | 1·3 | – 5·9 | – 4·6 | – 6·2 | – 6·3 |
| 330·5 | 409·4 | 338·9 | 333·1 | 322·8 | 260·9 | 418·2 |
| 184·8 | 214·9 | 145·0 | 205·0 | 245·0 | 253·1 | 325·0 |
| 27·7 | 29·2 | 35·0 | 38·9 | 44·6 | 51·2 | 58·9 |
| 107·1 | 185·7 | 110·0 | 166·1 | 200·4 | 201·9 | 266·1 |
| 228·2 | 198·4 | 248·0 | 124·1 | 128·4 | 50·5 | 124·8 |
| 3·1(ஏ) | 20·6(ஏ) | – 21·0(ஏ) | 36·6(ஏ) | – 19·4(ஏ) | 8·3(ஏ) | 28.3(ஏ) |
| – 7·9 | 4·7 | 1·9 | 6·3 | 13·4 | 0·2 | – 0·5 |
| 23·7 | 23·7 | 52·9 | 92·0 | 95·4 | 99·7 | 118·0 |
| 29·3 | 16·3 | 44·5 | 68·7 | 75·7 | 92·8 | 112·4 |
| 5·6 | 5·9 | 9·7 | 7·8 | 12·2 | 17·2 | 35·9 |
| 23·7 | 10·4 | 34·8 | 60·9 | 63·5 | 75·6 | 76·5 |
| — | 13·3 | 18·1 | 31·1 | 31·9 | 24·1 | 41·5 |
| – 6·0 | ... | 40·2 | – 0·4 | – 45·4 | – 19·5 | 82·4 |
| – 6·0 | ... | 40·2 | – 0·4 | – 45·4 | – 19·5 | 47·2 |
| — | — | — | — | — | — | 35·2 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(எ) 1954/55 ஆம் ஆண்டுகளுக்கான உணவு மானியச் செலவைப் பிரதிபலிக்கும் 360 இலட்சம் ரூபாய்கள் கொண்ட தொகையானது, முற்பணக்கணக்குகளிலிருந்து மீண்டெழும் செலவுக்கு 1958/59 ஆம் ஆண்டில் மாற்றப்பட்டது. 1958/59 ஆம் ஆண்டுக்கான எண்தொகைகளில், இவ்வட்டுச் சீராக்கம் விலக்கப்பட்டிருக்கையில் (குறிப்பு*ஐப் பார்க்கவும்), 1954/55 ஆம் ஆண்டிற்கான எண்தொகைகள், அதை உள்ளடக்கும்படி திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

(ஏ) 1959/60 இல் ரூ 370 இலட்சம், 1960/61 இல் ரூ 22 இலட்சம், 1961/62, 1962/63, 1963/64களில் ரூ 2 இலட்சம், 1964/65 இல் ரூ 215 இலட்சம், 1965/66 இல் ரூ 211 இலட்சம் ஆகிய ச. பு. அ. வ., ச. நா. நி., ச. அ. ச. ஆகியவற்றிற்குக் கொடுபட்டவையும், மத்திய வங்கியிடமிருந்து பெற்ற விசேடக் கடன் மூலம் செய்யப்பட்ட கொடுப்பனவுகளைத் தவிர்த்து.

(ஐ) அந்நிய நன்கொடையிலிருந்து அறவிடப்படும் மூலதனச் செலவுகள், 1960-61 ஆம் ஆண்டு முதலாக வரவுசெலவுத் திட்டத்தினுட் சேர்க்கப்பட்டுள்ளன. 1960-61 ஆம் ஆண்டிற்கு முன், வரவு செலவுத் திட்டநிதியீட்டத்திற்காக இறைசேரிக்குக் கிடைக்கக்கூடிய அந்நிய நன்கொடைகளின் செலவு செய்யப்படாத மிச்சசங்கள் மட்டும், நிர்வாகக் கடன்பாடுகளுட் சேர்க்கப்பட்டுள்ளன.

(ஒ) 1965/66 ற்கான அரசிறை எண்தொகைகள் அரசாங்கக் கணக்குகளிற் பிரசுரிக்கப்பட்ட எண் தொகைகளுடன் வேறுபடுவன. இதற்கு இவ்வரசிறை எண்தொகைகள், உணவு ஆணையாளரிடமிருந்து ரூ 268 இலட்சம் கொண்ட ஒரு கணக்கேட்டு வரவுக் குறிப்பையும் அரசிறையின் கீழ் பகுக்கப்பட்ட ரூ 181 இலட்சம் கொண்ட அந்நிய நன்கொடைகளையும் தவிர்த்தும், தேசிய அபிவிருத்தி வரியின் தாமதக் கொடுப்பனவாகிய ரூ 5 இலட்சம் கொண்ட வரவை உள்ளடக்கியதுமே காரணமாகும். பின்னிணைப்பு 2 இன் அட்டவணை 18 இல் உள்ள அடிக்குறிப்பு (ஆ) வையும் காண்க.

(ஓ) தற்காலிகமானவை.

## அட்டவணை II (உ) 2

அரசாங்க அரசிறை

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | மூலமதிப்பீடுகள் 1965/66 | உண்மையான (தற்காலிகமான) 1965/66 | உண்மையான 1964/65 | 1964/65 இலிருந்து 1965/66 இல் ஏற்பட்ட மாற்றங்கள் (உண்மையான) | 1965/66 இன் மூலமதிப்பீடுகளுடன் ஒப்பிடுகையில் 1965/66 இன் (உண்மையான) மிகை (+) அல்லது குறை (-) |
|---|---|---|---|---|---|
| 1. இறக்குமதிவரிகள் (அ) | 554·9 | 476·8 | 435·8 | 41·0 | —78·1 |
| அதனுள் ... | | | | | |
| (அ) பருத்தி நெசவு நூல், பாவு நூல், துணிகள் ... | 18·0 | 36·2 | 29·5 | 6·7 | +18·2 |
| (ஆ) தானியமும் கோதுமை மாவும் ... | 22·7 | 19·2 | 19·8 | — 0·6 | — 3·5 |
| (இ) மண்ணெண்ணை, மோட்டார் ஸ்பிரிட்கள் முதலியன ... | 128·0 | 127·0 | 115·4 | 11·6 | — 1·0 |
| (ஈ) புகையிலையும், சிகரட்டும் ... | 44·0 | 28.8 | 42·5 | —13·7 | —15·2 |
| (உ) சீனி ... | 28·6 | 19·9 | 23·3 | — 3·4 | — 8·7 |
| (ஊ) ஏனைய பொருட்கள்* ... | 224·6 | 170·2 | 133·4 | 36·8 | —54·4 |
| 2. ஏற்றுமதி வரிகள் (ஆ) ... | 292·7 | 255·8 | 312·8 | —57·0 | —36·9 |
| அதனுள் | | | | | |
| (அ) தேயிலை (தேயிலை வரியும் உட்பட) | 225·8 | 202·4 | 228·8 | —26·4 | —23·4 |
| (ஆ) இரப்பர் ... | 20·1 | 17·0 | 22·4 | — 5·4 | — 3·1 |
| (இ) தெங்கு ... | 40·6 | 31·1 | 56·1 | —25·0 | — 9·5 |
| 3. வருமானவரி (மேலதிக அறவீடு தவிர்த்து) ... | 254·3 | 275·4 | 291·2 | —15·8 | +21·1 |
| 4. பூதல் வரி ... | 9·0 | 10·6 | 7·0 | 3·6 | + 1·6 |
| 5. தனியாள் வரி ... | 19·2 | 12·0 | 18·9 | — 6·9 | — 7·2 |
| 6. சாராய விற்பனை இலாபம் ... | 103·0 | 118·0 | 90·0 | 28·0 | +15·0 |
| 7. உள்ளூரிற் செய்யப்பட்ட மதுவின் ஈன வரி ... | 12·0 | 14·4 | 11·5 | 2·9 | + 2·4 |
| 8. புகையிலை வரி ... | 108·0 | 120·0 | 110·0 | 10·0 | +12·0 |
| 9. தேசிய லொத்தர் ... | 5·5 | 9·5 | 5·3 | 4·2 | + 4·5 |
| 10. மொத்த விற்பனை வரி ... | 34·0 | 39·1 | 34·8 | 4·3 | + 5·1 |
| 11. வங்கிப் பற்றுக்கள் வரி ... | 1·0 | 1·8 | 11·3 | — 9·5 | + 0·8 |
| 12. பார எண்ணை மோட்டார் வாகனங்கள்வரி | 28·7 | 10·0 | 41·9 | —31·9 | —18·7 |
| 13. வர்த்தக முயற்சிகளின் மொத்த வரவுகள் ... | 252·5 | 247·5 | 228·5 | 19·0 | — 5·0 |
| 14. ஏனைய அரசிறை ... | 223·0 | 242·3 | 217·1 | —25·2 | +64·6 |
| மொத்தம் .. | 1,897·8 | 1833·2(இ) | 1,816·4(இ) | —16·8 | —64·6 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) உத்தரவுச் சீட்டு முறையின் கீழமைந்த இறக்குமதிகளின் மீதுள்ள உத்தரவுச் சீட்டுக் கட்டணங்களை உள்ளடக்கும்.

(ஆ) சில்லறைகளை உள்ளடக்கும்.

(இ) பின்னிணைப்பு II இல் உள்ள அட்டவணை 18 இன் அடிக்குறிப்பு (ஆ) இல் கொடுக்கப்பட்ட காரணங்களால் இவ்வெண் தொகைகள், பிரசுரிக்கப்பட்ட அரசாங்கக் கணக்குகளிலுள்ள எண் தொகைகளுடன் ஒத்து வரமாட்டா.

* 1965/66 மதிப்பீடுகளில் அரசாங்க அரசிறைப் பகுப்பிற் (தலைப்பு 1. உபதலைப்பு 1 (9) ) காட்டப்பட்டுள்ள ஒரு விடயம்.

ஆண்டிற்குரிய ரூ. 18332 இலட்சம் உண்மை (தற்காலிக) அரசிறை, 1964/65ம் ஆண்டிற் குரிய அதன் தொடர்பான தொகையினும் (ரூ. 18164 இலட்சம்) பார்க்க ரூ. 168 இலட்சத் தால் அல்லது 0.9 சதவீதத்தால் கூடியதாகும்.

1956/57ம் ஆண்டு தொட்டு 1965/66ம் ஆண்டு வரையுள்ள பத்து வருட காலப் பகுதியில் அரசிறை 45.8 சதவீதத்தால் அல்லது வருடாந்தமாக 3.9 சதவீதத்தால் (கூட்டு விகிதம்) அதிகரித்துள்ளது. கடைசி ஐந்து நிதி வருடங்களிலும் அரசிறையில் ஏற்பட்ட அதி கரிப்பு 21.1 சதவீதம் அல்லது வருடாந்தமாக 4.0 சதவீதம் (கூட்டு விகிதம்) ஆக இருந்தது. 1964 இனதும், 1965 இனதும் வருடாந்த அறிக்கைகள் அரசிறையில் ஏற்பட்ட இக் கணிச மானளவு அதிகரிப்பை, 1963/64, 1964/65 நிதி வருடங்களின் போதான, அரசாங்க நிதி இயக்கங்களின் திருப்திகரமான அம்சங்களிலொன்ருகக் குறிப்பிட்டிருந்தன. எனவே சென்ற நிதி வருடத்தின்போது அரசிறையின் மொத்தத் தொகையில் அதிகரிப்பு இருந்த போதிலும், கடந்த நிதி வருடங்களில் அது காட்டிய வளர்ச்சி விகிதத்தினைத் தொடர்ந்தும் காட்டவில்லை என்பதைக் காணலாம்.

மேலும் ஆண்டு நடுவிலான மக்கட்தொகை எண்களின் அடிப்படையில் தனி யாளுக்கான அரசிறையை ஆராயின், அது 1964/65ம் ஆண்டுடன் முடியும் கடந்த ஐந்து ஆண்டுகளிலும் நிலையாகக்கூடிச் செல்லும் போக்கினைக் காட்டியிருப்பதையும் 1965/66இல் அது வீழ்ந்திருப்பதையும் காணலாம். இத்தனியாளுக்கான அரசிறை 1959/60ற்கான ரூ. 141.79இலிருந்து 1964/65இல் ரூ. 161.75ற்கு உயர்ந்து, 1965/66இல் ரூ. 159.41 ஆக வீழ்ந்துள்ளது. மதிப்பீடுகளின்படி மக்கட்தொகை 2.3 சதவீதத்தால் அதி கரிப்பதும், அரசிறைச் சேர்க்கைகள் 0.9 சதவீதத்தால் மட்டுமே அதிகரிப்பதுமான ஒரு சந்தர்ப்பத்திலே இது எதிர்பார்க்கப்பட வேண்டியதொன்ருகும்.

1965/66ம் ஆண்டின் மூலமதிப்பீடாகிய ரூ. 18978 இலட்சத்துடன் ஒப்பிடுகையில், உண்மையாகச் சேகரிக்கப்பட்ட அரசிறையில் ரூ.646 இலட்சம் வீழ்ச்சி தெரிகின்றது. ஒப் பியல்பான இவ் அரசிறை மிகை மதிப்பீடு 1962/63, 1963/64, 1964/65 ஆகிய நிதி ஆண்டு களில் முறையே ரூ. 1235 இலட்சம், ரூ. 286 இலட்சம், ரூ. 49 இலட்சமாக இருந்தன.

1964/65ம் ஆண்டின் உண்மையான அரசிறையுடனும் 1965/66ம் ஆண்டின் மூலமதிப்பீடுகளுடனும் ஒப்பியல்பான வகையில் 1965/66இன் உண்மை (தற்காலிக) அர சிறையுள் அடங்கும் பிரதான அரசிறை விடயங்களில் ஏற்பட்ட முக்கிய மாற்றங்கள் பற்றிய விபரங்களை அட்டவணை II (உ)2 காட்டுகின்றது.

1965/66ம் ஆண்டின் இறக்குமதி வருமானமானது[1] கடந்த நிதிவருட வரு மானத்திலும் பார்க்க ரூ. 410 இலட்சம் கூடுதலாக இருந்தது. நெசவு நூல் முதலியன (ரூ. 67 இலட்சம்), மோட்டார் ஸ்பிரிட் திரவ எரி பொருள் (ரூ. 116 இலட்சம்), "ஏனைய பொருட்கள்" (ரூ. 368 இலட்சம்) ஆகியவற்றின் வருமானத்தின் அதிகரிப்பு ரூ. 551 இலட்ச மாக இருந்தது. இவ்வருமான அதிகரிப்பானது புகையிலை, சிகரட் (ரூ. 137 இலட்சம்), சீனி (ரூ. 34 இலட்சம்) ஆகியவற்றின் வரிகளிலிருந்து பெற்ற வருமான வீழ்ச்சிகளினுல் ஓரள விற்குத் தேற்றப்பட்டது. நெசவு நூல், பாவு நூல்கள், துணிகள் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட கூடிய வருமானம், அவற்றின் இறக்குமதிகள் கூடியதாலும், அவற்றின் மீதான வரி விதிப்பு முறையின் மாற்றத்தினுலுமேற்பட்டதாம். மோட்டார் ஸ்பிரிட் திரவ எரி பொருள் தொகுதியில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு பார எண்ணெ மீதான வரி உயர்வு காரணமாயிருக்க "ஏனைய பொருட்கள்" தொகுதிக்குரிய வரி வருமானத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு இறக்குமதித் தொகையிலேற்பட்ட உயர்வும், சில விடயங்கள்[2] மீதான 10 சதவீத மேலதிகக் கட்டணமும் காரணமாயின. புகையிலை,சிகரட்

1. உத்தரவுச்சீட்டு முறையின் கீழமைந்த இறக்குமதிகள் மீதுள்ள உத்தரவுச் சீட்டுக்கட்டணங்களையும் உள்ளடக்கும். ஏற்றுமதி இறக்குமதி அளவுகளைக் குறிக்கும் தொகைகள், சுங்கப்புள்ளி விபரங்களை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

2. இருந்த இறக்குமதித் தீர்வைகளின் விகிதத்தில், 10 சத மேலதிகக் கட்டணம் விதிக்கப்பட்டது. உணவு விடயங்கள், மருந்துப் பொருட்களும், மருந்தும், வளமாக்கி, மண்ணெண்ணெ உட்பட பெட்ரோலியப் பொருட்கள், துணி, மோட்டார் மாற்றீட்டு உறுப்புக்கள், சீமெந்து, விவசாய இயந்திரமும், கருவி களும் ஏற்றுமதிக்கைத்தொழில்களினுல் உபயோகிக்கப்படுவனவுமான விடயங்கள், இம்மேலதிகக் கட்டணத்திலிருந்து விலக்கப்பட்டுள்ளன.

தொகுதிக்குரிய வருமானம் குறைவுற்றதற்கு, குறைந்த இறக்குமதிகள் காரணமாயிருக்க, சீனியிலிருந்து பெறும் வரி வருமானம், வீழ்ந்தமைக்கு ஓரளவில், வரி செலுத்துவதில் உணவு ஆணையாளர் காட்டிய தாமதம் காரணமாயிற்று.

இறக்குமதி வருமானத்திற்கு மாறாக, ஏற்றுமதி வரிகளின் [1] வருமானமானது, 1964/65-ற்குரியதுடன் ஒப்பிடுமிடத்து 1965/66-ம் ஆண்டில் குறிப்பிடத்தக்கதொரு, ரூ. 570 இலட்சம் ( 18 சத வீதம் ) கொண்ட வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது. மூன்று பிரதான ஏற்றுமதிகளிலிருந்து பெறப்படும் வரி வருமானங்களும் குறைவுற்றுள்ளன. தேயிலையின் மீதான வரிகள் மூலமான வருமானம் ரூ. 264 இலட்சத்தால் குறைந்தது. இரப்பரின் மீதான ஏற்றுமதி வரி ரூ. 54 இலட்சத்தாலும், தெங்குப் பொருட்களின் ஏற்றுமதி மீதான வரி வருமானம் ரூ. 250 இலட்சத்தாலும் வீழ்ச்சியடைந்தது. தேயிலை ஏற்றுமதியின் மூலமான வருமானத்தின் வீழ்ச்சிக்கு, ஏற்றுமதி செய்யப்பட்ட தொகையினதும், தேயிலை விலையினதும் வீழ்ச்சியே காரணம். 1965/66 நிதி ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் தொகையானது 35 இலட்சம் இறாத்தல்களால் [2] வீழ்ந்திருக்க, எல்லாத் தரத் தேயிலைகளினதும் சராசரி க. ஏ. பெ. விலையானது இறாத்தலுக்கு ரூ. 2.37 ஆக 10 சதத்தால் குறைந்துள்ளது. இத் தொடர்பில் ( பெறுமான விகித ) தேயிலை வரியிலிருந்து பெற்ற வரி வருமானம் 1965/66ல் ரூ. 258 இலட்சத்தால் ரூ. 368 இலட்சத்திற்கு வீழ்ச்சிபெற்றது குறிப்பிடத் தக்கதொன்றாகும்.

இதற்கு எதிர்மாறான முறையில் இரப்பர் ஏற்றுமதி வரியிலிருந்து பெற்ற வருமானம் ஏற்றுமதி செய்யப்பட்ட இரப்பரின் அளவிலும், அதன் சராசரி க. ஏ. பெ. விலையிலும்[3] அதிகரிப்புகள் ஏற்பட்டிருப்பினும், வீழ்ச்சி அடைந்திருக்கின்றது.

இரப்பர் ஏற்றுமதிகள் 248 இலட்சம் இறாத்தல்களால் கூடி 2798 இலட்சம் இறாத்தல்களாக, கவனத்திற் கொள்ளப்பட்ட நிதி வருடத்தில் அமைய, எல்லாத்தர இரப்பர்களினதும் க. ஏ. பெ. விலையானது 1 சதத்தால் கூடி ரூ. 1·15 ஆக இருந்தது. ஆர். எஸ். எஸ். 1-ம் ரகத்தின் இலண்டன் சந்தை விலையின் அடிப்படையிலேயே வரி கணிக்கப்படுவதால், சீன மக்கட் குடியரசுடனான இரப்பர் ஒப்பந்தத்தின் கீழ் இரப்பரின் மீது கிடைக்கும் மேலதிக விலையானது, வாராந்த வரி கணிக்கப்படும்போது[4] எடுத்துக் கொள்ளப்படுவதில்லை என்பது இம்முரணை விளக்கும்.

தெங்குப் பொருட்களின் மீதான ஏற்றுமதி வரிகளது வருமானமானது மூன்று தெங்குப் பொருட்களின் மீதான வரி வருமானமும் குறைந்ததன் காரணமாக ரூ. 250 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றது. 1964/65-க்குரிய வரிச் சேர்க்கைகளுடன் ஒப்பிடுகையில் தேங்காயெண்ணெ வரிச் சேர்க்கைகள் ரூ. 145 இலட்சத்தால் குறைவுற்றிருக்க, தேங்காய்த் துருவலினதும், கொப்பராவினதும் முறையே ரூ. 50 இலட்சத்தாலும், ரூ. 54 இலட்சத்தினாலும் வீழ்ந்துள்ளன. மேலும் எல்லா விதத் தெங்குப் பொருட்களின் வரிச் சேர்க்கைகளிலே ஏற்பட்ட குறைவிற்கு அவற்றினது விலைகளினதும்[5] ஏற்றுமதித் தொகையினதும் வீழ்ச்சியே காரணமாகும். 1965/66-இல் தேங்காயெண்ணெயின்

---

1. கொழும்பு, இலண்டன் ஏலங்களில் விதிக்கப்பட்ட தேயிலை வரியை உள்ளடக்கும்.

2. தேயிலை ஏற்றுமதிகளானவை 1964/65-ம் ஆண்டிற்குரிய 4780 இலட்சம் இறாத்தல்களுக்கெதிராக 1965/66-ல் 4745 இலட்சம் இறாத்தல்களாக இருந்தன.

3. இரப்பரின் மீதான ஏற்றுமதி வரிகள் ஒரு சாய்வுப் பிரமாண முறைப்படி அமைக்கப்பட்டுள்ளன.

4. 1965/66இல் சீனமக்கட்குடியரசுக்கான இரப்பர் ஏற்றுமதிகள் 208 இலட்சம் இறாத்தல்களால் (ரூ. 345 இலட்சம்) அதிகரித்துள்ளது.

5. தெங்குப்பொருட்களின் மீதான ஏற்றுமதித்தீர்வைகள் ஒரு சாய்வுப் பிரமாணமுறைப்படி அமைக்கப் பட்டுள்ளன.

ஏற்றுமதிகள் 33·9 ஆயிரம் தொன்களால்[1] வீழ்ச்சியடைய தேங்காய்த்துருவலினதும்,[2] கொப்பராவினதும்[3] ஏற்றுமதிகள் முறையே 3.9 ஆயிரம் தொன்களாலும், 18·6 ஆயிரம் தொன்களாலும் குறைவுற்றுள்ளன.

எல்லாவிதத் தெங்குப் பொருட்களினது விலைப்போக்குகளும் நம்பிக்கையூட்டுவனவாக அமையவில்லை. மூன்று விதத் தெங்குப் பொருட்களினதும் சராசரி ( க. ஏ. பெ. ) விலையானது கடந்த இரண்டு நிதி வருடங்களிலும் அதிகரிப்பைக் காட்டியிருக்க 1965/66 நிதி ஆண்டில் இப்பொருட்களினது சராசரி விலையானது அந்தருக்கு ரூ. 1·15-ஆல் குறைந்து ரூ. 71·43ஆக இருந்தது.

1965/66-இன் வருமான வரி வரவுகளை ( மேலதிக அறவீட்டைத்தவிர்த்து ) 1964/65-இன் வரவுகளுடன் ஒப்பிடுகையில் அவை ரூ. 158 இலட்சத்தால் குறைந்து ரூ. 2754 இலட்சமாக இருந்தன. இவ்வருமான வரி வரவுகளின் வீழ்ச்சிக்குப் பின் வருவனவற்றைக் காரணம் காட்டலாம்.

(அ) எல்லா நிலைகளிலும் வரி விகிதங்கள் குறைக்கப்பட்டமை.

(ஆ) சேமிப்பு நிவாரணம், அத்துடன்

(இ) ஏற்றுமதிப் பொருட்களின் விலைகளின் இறக்கம்.

சொந்த வரிகளின் மூலமான வரவுகளும் ரூ. 69 இலட்சத்தால் வீழ்ந்து ரூ. 120 இலட்சமாக இருந்தன. தனியாட்களுக்கும், கூட்டு நிலையங்களுக்குமான விகிதங்கள் குறைக்கப்பட்டுள்ளன. மறுபுறத்தில் மொத்த விற்பனை வரிகளிலிருந்தும், பூதல் வரியிலிருந்தும் முறையே ரூ. 43 இலட்சம், ரூ. 36 இலட்சமாகிய கூடியவரவுகள் பெறப்பட்டன.

பார எண்ணை, மோட்டார் வாகனங்களின் மீதான வரியினதும் வங்கிப்பற்றுக்கள் வரியினதும் வருமானம் 1964/65-ற்குரிய வருமான வரவுகளுடன் ஒப்பிடுகையில் முறையே ரூ. 319 இலட்சத்தாலும் ரூ. 95 இலட்சத்தாலும் வீழ்ந்திருந்தன. இவ்வரிகளின் நீக்கத்தினாலேயே இவை வீழ்ச்சியுற்றன. பார எண்ணை, மோட்டார் வாகனங்களின் மீதான வரி 1966 சனவரி 1-ம் தேதி முதல் நீங்கிற்று. வங்கிப் பற்றுக்கள் வரியானது 1965 ஒற்றோபர் 1-ம் தேதி நீக்கம்செய்யப்பட்டது.[4]

ஏற்றுமதி வரிகளிலிருந்தும், வருமான வரியிலிருந்துமான வருமான வரவுகளின் வீழ்ச்சிக்கெதிரான விதத்தில் சாராய விற்பனையிலிருந்து பெற்ற இலாபங்களும், உள்நாட்டில் வடித்த மதுபானத்தின்[5] மீதான வரிகளும் புகையிலையின் மீதான வரியும் தொடர்ந்தும் அதிகரித்து வந்து, 1965/66-இல் அரசிறைக்கு குறிப்பிடத்தக்க விதத்தில் உதவியுள்ளன. சாராய விற்பனையிலிருந்து பெற்ற இலாபங்கள் ரூ. 280 இலட்சங்களால் கூடியுள்ளன. புகையிலை வரி மூலம் பெற்ற வரவுகள் ரூ. 100 இலட்சத்தால் அதிகரித்துள்ளன. 1965 ஆண்டறிக்கையானது, அண்மை வருடங்களின் புகையிலை வரி மூலமான வருமான வரவுகளின் வளர்ச்சியின் முக்கியத்துவத்தினைப் பற்றி குறிப்பிட்டுள்ளது. இத்தொடர்பில் 1960/61 தொட்டு 1965/66 வரையுமான ஐந்து வருடகாலப் பகுதியில் புகையிலை வரி வருமானமானது வருடாந்தமாக 21·4 சதவீதத்தில் (கூட்டு விகிதம்) அதிகரித்துள்ளது என்பது கவனிக்கத்தக்கது.

---

1. தேங்காயெண்ணை ஏற்றுமதியானது 1964/65ற்குரிய 103.8 ஆயிரம் தொன்களுக்கெதிராக 1965/66இல் 69.9 ஆயிரம் தொன்களாக இருந்தது.
2. தேங்காய்த்துருவல் ஏற்றுமதிகள் 1964/65ற்குரிய 51.5 ஆயிரம் தொன்களுக்கெதிராக 1965/66இல் 47.6 ஆயிரம் தொன்களாக இருந்தன.
3. கொப்பரா ஏற்றுமதிகள் 1964/65ற்குரிய 44.9 ஆயிரம் தொன்களுக்கெதிராக 1965/66இல் 26.3 ஆயிரம் தொன்களாக இருந்தன.
4. சேர்க்கப்பட்ட ரூபா 18 இலட்சம் வருமானமானது சேர்க்கப்பட்டு ஆனால் திரட்டு நிதிக்கு 30-9-65க்கு முன் வரவு வைக்கப்படாத தொகையைப் பிரதிபலிக்கின்றது.
5. வெளிநாட்டு மதுபான வகை அதாவது பீர், ஜின், பிராந்தி, ரம்.

தேசிய லொத்தரிலிருந்தும், வர்த்தக முயற்சிகளின் [1] மொத்த வரவுகளிலிருந்தும் பெற்ற வருமானங்கள் 1965/66-இல் முக்கிய மாற்றங்களைக் காட்டிய ஏனைய இரு விடயங்களாகும். தேசிய லொத்தரின் வரவுகள் ரூ. 42 இலட்சத்தால் அதிகரிக்க, வர்த்தக முயற்சிகளின் மொத்த வரவுகள் ரூ. 190 இலட்சத்தால் கூடி ரூ. 2475 இலட்சமாக அமைந்தன. மீளப்பார்வையிடும் நிதி வருடத்தில் முக்கியம் வாய்ந்த அதிகரிப்புகளாக மின்சார, தபாற்தந்தி திணைக்களங்களினது அதிகரிப்புகளாகிய முறையே ரூ. 68 இலட்சமும், ரூ. 52 இலட்சமும் அமைகின்றன.

**அரசாங்கச் செலவு:**

1956/57 தொடக்கம் 1965/66 வரைக்குமான பகுதிக்குரிய மொத்த அரசாங்கச் செலவு [2] மீண்டெழும் வாக்குகளிலிருந்த (1ம், 2ம், 4ம், 6ம் வாக்குகள்) அறவிடப்படும் செலவு, மூலதன வாக்குகளிலிருந்து (3ம், 5ம், 7ம் வாக்குகள்) அறவிடப்படும் செலவு எனப்பகுக்கப்பட்டு, அட்டவணை 11 (உ) 3இல் காட்டப்பட்டுள்ளது. நடைமுறைச் செலவினதும் [3] வரவு செலவு திட்டத்திற்கப்பாற்பட்ட நிதிகளிலிருந்து அறவிடப்பட்ட செலவுக்கும் ஆக சீராக்கப்பட்ட மூலதனச் செலவினதும் [4], பத்து வருட காலத் தொடரையும் இவ்வட்டவணை காட்டுகின்றது.

தற்போது கிடைக்கப்பெறும் தற்காலிக எண்தொகைகளின்படி, 1965/66ற்குரிய வாக்களிக்கப்பட்ட மொத்த அரசாங்கச் செலவு ரூ. 23882 இலட்சமாகும். 1964/65இல் இருந்த ரூ. 380 இலட்சம் அல்லது 1.7 சதவீத அதிகரிப்பிற்கெதிராக, 1965/66 இன் மொத்த வாக்களிக்கப்பட்ட செலவு, அதற்கு முந்திய நிதி வருடத்திற்குரிய செலவிலும் ரூ. 1136 இலட்சத்தால் அல்லது 5.0 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. எனினும் இவ்வதிகரிப்பானது, 1965/66 உடன் முடிவடையும் பத்து நிதி வருடங்களின் போதான வளர்ச்சி வீதமாகிய வருடாந்தமான 6.9 சதவீதத்திலும் (கூட்டு விகிதம்) குறைவாக இருக்கின்றது.

1965/66இல் ஏற்பட்ட இவ் ரூ. 1136 இலட்சம் அதிகரிப்பானது மீண்டெழும் செலவிலும், மூலதனச் செலவிலும் ஏற்பட்ட அதிகரிப்பின் இணைந்த விளைவாகும். மீண்டெழும் செலவானது ரூ. 571 இலட்சத்தால் அதிகரித்திருக்க, 1965/66க்குரிய அரசாங்க நிதி இயக்கங்களின் மிகத் திருப்திகரமான அம்சமாக மூலதன வாக்குகளிலிருந்து அறவிடப்படும் செலவானது ரூ. 565 இலட்சத்தினால் கூடி ரூ. 5277 இலட்சமாக அமைந்துள்ளது. இம் மூலதனச் செலவுத் தொகையே இது வரையிலான நிதி வருடங்களெல்லாவற்றுக்குமான தொகையுள் ஆகக்கூடியதாகும்.

1965/66ற்குரிய வாக்களிக்கப்பட்ட செலவின் மூலமதிப்பீடுகளுடன் ஒப்பிடுகையில், அவ்வருடத்தின் உண்மையான (தற்காலிக) செலவு ரூ. 167 இலட்சம் கொண்ட குறைச் செலவைக் காட்டுகின்றது. இது மீண்டெழும் வாக்குகளின் மீதான செலவிலேற்பட்ட அதிகரிப்பாகிய ரூ. 337 இலட்சத்தினால் (1.8 சதவீதம்) ஓரளவு தேற்றப்பட்ட மூலதன வாக்குகளில் ஏற்பட்ட குறை செலவாகிய ரூ. 504 இலட்சத்தினால் (8.7 சதவீதத்தினால்) ஏற்பட்டதொன்றாகும். 1963/64இலும், 1964/65இலும் முறையே 22.0 சதவீதமாகவும் 15.6 சதவீதமாகவும் இருந்த மூலதன வாக்குகளின் மீதான குறை செலவானது 1965/66இல் 8.7 சதவீதமாகக் குறைவுற்றிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

**நடைமுறைச் செலவு :**

அட்டவணை 11 (உ) 3ல் காட்டப்பட்டது போல 1965/66ம் ஆண்டிற்குரிய நடைமுறைச் செலவானது (தற்காலிக எண் தொகைகள்) 1964/65 ஆண்டிற்குரிய நடை

1. புகையிரதம், மின்சாரம், தபாற்தந்தி, ஒலிபரப்பு ஆகிய திணைக்களங்களிலிருந்தும், துறைமுக ஆணைக் குழுவிலிருந்தும் பெற்ற வரவுகளை உள்ளடக்கும்.
2. முற்பணக் கணக்கு இயக்களினால் உண்டான தேறிய கொடுப்பனவுகளை (அல்லது வரவுகளை) உள்ளடக்கும்.
3. மீண்டெழும் வாக்குகளிலுள்ள மூலதன விடயங்களைக் கழித்தபின்.
4. வரவு செலவுத் திட்டத்திற்கப்பாற்பட்ட மூலதனச் செலவையும், மீண்டெழும் வாக்குகளிலுள்ள விடயங்களையும், மூலதன வாக்குகளிலிருந்து அறவிடப்படும் செலவிடப்படும் செலவுடன் சேர்த்து.

# அட்டவணை II (உ) 3

## அரசாங்கத்தின் செலவு

பத்து இலட்சம் ரூபாய்களில்

| வருடம் | மீண்டெழும் வாக்குப் பணங்களிலிருந்து அறவிடப்படும் செலவு: நடைமுறை செலவு (i) | மீண்டெழும் வாக்குப் பணங்களிலிருந்து அறவிடப்படும் செலவு: மீண்டெழும் வாக்குப் பணங்களிலுள்ள மூலதன விடயங்கள் (ii) | மீண்டெழும் வாக்குப் பணங்களிலிருந்து அறவிடப்படும் செலவு: மொத்தம் (அ) (iii)=(i)+(ii) | மூலதன வாக்குப் பணங்களிலிருந்து அறவிடப்படும் செலவு: உண்மை இருப்புச் சொத்துக்களின் கொள்ளல் ஆக்கல் பராமரிப்பு (iv) | மூலதன வாக்குப் பணங்களிலிருந்து அறவிடப்படும் செலவு: நிதி இருப்புச் சொத்துக்களைக் கொள்ளுதல் (ஆ) (v) | மூலதன வாக்குப் பணங்களிலிருந்து அறவிடப்படும் செலவு: மொத்தம் (இ) (vi)=(iv)+(v) | மொத்தச் செலவு (vii)=(iii)+(vi) | வ. செ. திட்டத்திற் கப்பாற்பட்ட நிதிகளிலிருந்தான மூலதனச் செலவு (viii) | மொத்த மூலதனச் செலவு (ஈ) (ii)+(ix)=(vii)+(viii) | முற்பணக் கணக்குகளின் மீதான தேறிய வரவுகள் (—) அல்லது கொடுப்பனவுகள் (x) | மொத்தச் செலவு (ஊ) (xi)=(vii)+(viii)+(x) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1955/56 ... ... | 862·8 | 151·6 | 1,014·4 | 181·8 | 29·2 | 211·0 | 1,225·4 | 68·3 | 430·9 | 29·0 | 1,322·7 |
| 1956/57 ... ... | 976·7 | 128·5 | 1,105·2 | 198·2 | 15·1 | 213·3 | 1,318·5 | 54·1 | 395·9 | 133·3 | 1,506·0 |
| 1957/58 ... ... | 1,118·2 | 161·9 | 1,280·1 | 227·8 | 54·8 | 282·6 | 1,562·7 | 54·1 | 498·6 | — 63·4 | 1,553·3 |
| 1958/59 ... ... | 1,274·4 | 157·8 | 1,432·2 | 257·5 | 45·9 | 303·4 | 1,735·6 | 31·8 | 493·0 | 5·8 | 1,773·2 |
| 1959/60 ... ... | 1,365·4 | 146·5 | 1,511·9 | 258·6 | 48·0 | 306·6 | 1,818·5 | 42·6 | 495·7 | 1·3 | 1,862·4 |
| 1960/61 ... ... | 1,471·3 | 69·5* | 1,540·8 | 378·8 | 41·1 | 419·9 | 1,960·7 | 29·7 | 519·1 | 14·2 | 2,004·7 |
| 1961/62 ... ... | 1,498·1 | 82·6 | 1,580·7 | 394·4 | 86·2 | 480·6 | 2,061·3 | 22·4 | 585·6 | 14·6 | 2,098·3 |
| 1962/63 ... ... | 1,534·0 | 62·4 | 1,596·4 | 398·3 | 4·0 | 402·3 | 1,998·7 | 24·3 | 489·0 | —13·7 | 2,009·3 |
| 1963/64 ... ... | 1,753·6 | 80·5 | 1,834·1 | 378·0 | 24·5 | 402·5 | 2,236·6 | 34·6 | 517·6 | —16·1 | 2,255·2 |
| 1964/65 ... ... | 1,731·9 | 71·5 | 1,803·4 | 444·3 | 26·9 | 471·2 | 2,274·6 | 37·5 | 580·2 | —27·9 | 2,284·0 |
| 1965/66 மூலமதிப்பீடுகள் ... | 1,762·8 | 64·0 | 1,826·8 | 546·0 | 32·1 | 578·1 | 2,404·9 | 25·9 | 668·0 | வி·கி | 2,430·8 |
| உண்மை (தற்காலிகமானவை) | 1,792·0 | 68·5 | 1,860·5 | 493·4 | 34·3 | 527·7 | 2,388·2 | 36·2 | 632·4 | 11·2 | 2,435·6 |
| 1966/67 மூலமதிப்பீடுகள் | 1,891·8 | 81·2 | 1,973·0 | 739·9 | 21·8 | 761·7 | 2,734·7 | 51·7 | 894·6 | வி·கி | 2,786·5 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* 1960 - 61 தொடக்கமாக மீண்டெழும் வாக்குப் பணங்களிலுள்ள மூலதன விடயங்களிலே தெரியும் கூரிய வீழ்ச்சிக்கு முன்னர் அரசாங்கக் கணக்குகளில் மீண்டெழும் வாக்குப் பணங்களின் கீழ் அடக்கப்பட்டிருந்த மூலதனத்தன்மை வாய்ந்த சில விடயங்கள், மூலதன வாக்குப் பணங்களிற்கு மாற்றப்பட்டமையே காரணம்.

(அ) அட்டவணை II (உ) 1 இல் விடயம் 1 ஆ 1 ஐக் காண்க
(ஆ) அட்டவணை II (உ) 1 இல் விடயம் 1 ஆ 2 ஐக் காண்க
(இ) பின்னிணைப்பு II இன் அட்டவணை 21 இல் விடயம் 20 ஐக் காண்க
(ஈ) பின்னிணைப்பு II இன் அட்டவணை 21 இல் விடயம் 22 ஐக் காண்க
(உ) பின்னிணைப்பு II இன் அட்டவணை 21 இல் விடயம் 23 ஐக் காண்க
(ஊ) பின்னிணைப்பு II இன் அட்டவணை 21 இல் விடயம் 24 ஐக் காண்க

முறைச் செலவிலும் ரூ. 601 இலட்சம் அல்லது 3.5 சதவீதம் உயர்ந்து இருந்தது. சென்ற நிதி வருடத்தில் நடைமுறைச் செலவில் ஏற்பட்ட ரூ. 217 இலட்ச வீழ்ச்சிக்கு எதிராக இது உள்ளது. எனினும் 1965/66இல் நடைமுறைச் செலவின் சதவீத அதிகரிப்பானது, 1956/57 தொட்டு 1965/66 (4) வரைக்குமான பத்து வருட காலப்பகுதிக்குரிய வருடாந்த நடைமுறைச் செலவு அதிகரிப்பு விகிதத்திலும் [1] குறைவாகவே இருந்தது. ஒப்பிட்டு நோக்கத்தகுந்ததாய் 1964/65 தொட்டு 1966/67 வரைக்குமான நிதியாண்டுகளுக்கான அரசாங்க நடைமுறைச் செலவானது அட்டவணை 11 (உ) 4ல் சிறிது விரிவாகக் காட்டப்பட்டுள்ளது.

## அட்டவணை II (உ) 4

### 1964/65 தொடக்கம் 1966/67 வரைக்குமான நடைமுறைச் செலவு

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | உண்மையான 1964/65 | உண்மையான (தற்காலிக) 1965/66 | மூலமதிப் பீடுகள் 1965/66 | மூலமதிப் பீடுகள் 1966/67 |
|---|---|---|---|---|
| 1. நிர்வாகம் ... | 243·6 | 257·7 | 264·3 | 276·5 |
| 2. சமூக சேவைகள், அதனுள் ... | 491·5 | 500·6 | 502·5 | 522·6 |
| (அ) கல்வி ... | 329·0 | 331·6 | 334·5 | 347·4 |
| (ஆ) சுகாதாரம் ... | 153·5 | 159·6 | 159·0 | 163·8 |
| 3. பொருளாதார சேவைகள் ... | 124·4 | 122·1 | 124·8 | 144·5 |
| 4. அரசாங்க முயற்சிகள்* ... | 246·9 | 259·2 | 256·4 | 258·2 |
| 5. மாற்றல் கொடுப்பனவுகள் அதனுள் | 625·5 | 652·4 | 614·8 | 690·0 |
| (அ) உணவு மானியங்கள் ... | 290·0+ | 290·0+ | 271·5 | 307·3 |
| (ஆ) பொதுப்படு கடனின் மீதான வட்டி | 105·9 | 123·1 | 114·9 | 139·7 |
| (இ) இளைப்பாறற் சம்பளங்கள் | 143·3 | 141·4 | 145.9 | 156·4 |
| 6. மொத்த நடைமுறைச் செலவு ... | 1,731·9 | 1,792·0 | 1,762·8 | 1,891·8 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* புகையிரத, மின்சார, தபால் தந்தி ஒலிபரப்புத் திணைக்களங்களினதும் துறைமுக ஆணைக் குழுவினதும் நடைமுறைக் கொடுப்பனவுகளை அடக்கும்.

\+ இறைசேரிக் கணக்கு எடுகளிற் கொடுக்கப்பட்ட தொகைகள் போல, இத்தொகைகள் தரப்பட்டிருக்கின்றன.

1964/65ற்குரியதுடன் ஒப்பு நோக்கும்பொழுது புலப்படும் 1965/66ம் ஆண்டின் நடைமுறைக் கணக்கின் பேரிலான கூடிய செலவிற்கு மாற்றல் கொடுப்பனவுகள் (ரூ. 269 இலட்சம்), நிர்வாகச் செலவு (ரூ. 141 இலட்சம்) அரசாங்க முயற்சிகள் (ரூ. 123 இலட்சம்) சமூக சேவைகள் (ரூ. 91 இலட்சம்) ஆகியனவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும். இவ்வதிகரிப்பானது பொருளாதார சேவைகளின் மீதான செலவில் உண்டான ரூ. 23 இலட்சம் கொண்ட வீழ்ச்சியினால் ஓரளவு தேற்றப்பட்டது.

1. நடைமுறைச் செலவானது வருடாந்தமாக 7.6 சதவீதத்தால் (தொடர் வட்டி) அதிகரித்துள்ளது.

சமூக சேவைகளின் மீதான செலவின் அதிகரிப்பிற்கு சுகாதாரம், கல்வி ஒட்டிய நடைமுறைக் கொடுப்பனவுகளின் உயர்வே காரணம். சுகாதாரம், கல்வி மீதான செலவுகள், சனத்தொகையும், பாடசாலைகளில் உள்ள பிள்ளைகளினது தொகையும் அதிகரிக்கும் ஒரு சூழ்நிலையில் எதிர்பார்க்கப்பட வேண்டியவையே. மாற்றல் கொடுப்பனவுகளின் பேரில் ஏற்பட்ட ரூ. 260 இலட்ச அதிகரிப்பானது, முக்கியமாக பொதுப் படுகடன் மீதான அதிகரித்த வட்டிக் கொடுப்பனவுகளின் மூலமே ஏற்பட்டதாம். உணவு மானியங்களுக்கான வாக்குப்பணத்திலிருந்து அறவிடப்பட்ட செலவு மாற்றமுறாதிருக்க, இளைப்பாறற் சம்பளக் கொடுப்பனவுகள் வீழ்ந்துள்ளன. பொதுப்படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகளின் அதிகரிப்பானது பிரதானமாக ரூபாக் கடன்கள், திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகளின் அதிகரிப்பாலேயே ஏற்பட்டது.

வாக்குப்பணத்திலிருந்து அறவிடப்படும் உணவு மானியங்கள் மீதான செலவு திறைசேரி கணக்கேடுகளின்படி மாற்றமுறாதிருக்க (ரூ. 2900 இலட்சத்தில்) உணவு ஆணையாளரினால் தரப்பட்ட உணவு பற்றிய இயக்கங்களின் செலவின் தற்காலிக எண் தொகைகள் 1965/66இல் ரூ. 195 இலட்சம் கொண்ட அதிகரிப்பைக் காட்டுகின்றன. 1965/66இன் [1] மூலமதிப்பீடும், உணவு பற்றிய இயக்கங்களின் செலவின் தற்காலிக எண் தொகைகளும், 1964/65ற்கான உண்மை உணவு மானியச் செலவும் அட்டவணை 11 (உ) 5இல் காட்டப்பட்டுள்ளன. ஒப்பிட்டு நோக்கும் பொருட்டு வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளில் தோன்றுகின்றபடி 1966/67ற்கான (மூலமதிப்பீடுகள்) எண்தொகைகளும் காட்டப்பட்டுள்ளன.

## அட்டவணை II (உ) 5

### 1964/65 தொட்டு 1966 67 வரைக்குமான உணவு மானியச் செலவு

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1964/65 | 1965/66 (மூல மதிப்பீடுகள்) | 1965/66 (தற்காலிக மானவை) | 1966/67 (மூல மதிப்பீடுகள்) |
|---|---|---|---|---|
| 1. இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின்மீது நுகர்ச்சியாளருக்கான மானியம் ... | 162·8 | 186·6 | 175·6 | 163·2 |
| 2. உள்ளூர் உற்பத்தி அரிசியின்மீது உற்பத்தியாளருக்கும் நுகர்ச்சியாளருக்குமான மானியம் ... | 261·1 | 258·1 | 271·2 | 333·0 |
| 3. உள்ளூர் உற்பத்தி செய்யப்பட்ட சிறிய வெங்காயத்தின் மீதான மானியம் ... | 4·6 | 1·5 | 4·5 | 4·5 |
| 4. விநியோகச் செலவும், ஏனைய செலவுகளும் ... | 27·6 | 32·2 | 39·4 | 33·0 |
| 5. மொத்த மானியம் (1 முதல் 4 வரை) ... | 456·1 | 478·4 | 496·8 | 533·7 |
| 6. சீனி விற்பனை இலாபம் ... | 169·9 | 195·3 | 202·3 | 199·9 |
| 7. கோதுமை மா விற்பனை இலாபம் ... | 1·1 | 2·1 | — 3·1 | 20·7 |
| 8. ஏனைய பொருட்களில் இலாபம் ... | 13·9 | 9·6 | 1·6 | 5·9 |
| 9. மொத்தம் (6 முதல் 8 வரை) ... | 185·0 | 207·0 | 200·8 | 226·5 |
| 10. தேறிய உணவு மானியம் (5-9) ... | 271·1 | 271·5 | 290·0 | 307·3([2]) |

மூலம் : உணவு ஆணையாளர்.

இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் நுகர்வின் பேரிலேற்பட்ட கூடிய மானியத்திற்கு (ரூ. 128 இலட்சம் கொண்ட) கம்போடியா, பர்மா, தாய்லாந்திலிருந்து பெற்ற அரிசியினது கூடிய இறக்குமதி விலை காரணமாகும். 1964/65லும் பார்க்க 1965/66இல், இறக்குமதியான அரிசியின் கொள்வனவுகளிலும் 4,312 தொன்கள் கொண்டதோர் சிறு உயர்வு ஏற்பட்டது. உள்ளூர் அரிசி உற்பத்தியினதும் நுகர்ச்சியினதும் மீதான கூடிய மானியம் (ரூ. 99 இலட்சம் கொண்ட) விவசாயச் சேவை ஆணையாளரிட

1. இதனை திறைசேரியினதும், உணவு ஆணையாளரினதும் கணக்குப் பதியும் நடைமுறைகளில் உள்ள வேறுபாடுகளால் விளக்கிக் கொள்ளலாம். இக்காரணத்தினாலேயே அட்டவணைகள் 11 (உ) 4 இலும், 11 (உ) 5இலும் உள்ள தேறிய உணவு மானியம் பற்றிய எண்தொகைகளில் வேறு பாடுகள் உள்ளன.

2. கூப்பன் புத்தகம் வைத்திருக்கும் ஒவ்வொருவருக்கும் இதுவரை கிழமையொன்றுக்கு மானியம் அளிக்கப்பட்ட 2 படி அரிசி வழங்கி வந்ததற்குப் பதிலாக 1966 டிசெம்பர் 18ஆந் திகதியிலிருந்து 1 படி அரிசியை இலவசமாக வழங்குவதென அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதன் விளைவால் நுகர்வோருக்கு வழங்கும் அரிசியின் மொத்த அளவில் ஏற்படும் மாற்றம் அரிசி மானியத்தில் கணிசமான அளவு சேமிப்பைக் கொணருமென எதிர்பார்க்கப்படுகின்றது. வழங்கப்படும் அரிசியின் அளவு வீழ்ச்சி மாவின் நுகர்ச்சியை அதிகரிக்குமெனவும், இவ்வதிகரித்த விற்பனையால் கூடிய இலாபம் வருமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மிருந்து கொள்வனவு செய்து நுகர்வோருக்கு விற்ற அரிசியின் அளவில் ஏற்பட்ட 26,399 தொன்கள் கொண்ட அதிகரிப்பினுல் ஏற்பட்டதெனலாம். உள்ளூர் அரிசி விற்பனவுகள் 1964/65இலும் பார்க்க 1965/66இல் 42,769 தொன்களால் உயர்ந்திருந்தன. விநியோகச் செலவும், ஏனைய செலவுகளும் கூட ரூ. 118 இலட்சத்தால் உயர்ந்தன. இதன் விளைவாக 1965/66ல் மொத்த மானியம், முந்திய நிதி வருடத்தினதிலும் பார்க்க ரூ. 407 இலட்சத்தால் கூடி இருந்தது. எனினும் தேறிய உணவு மானியம் ரூ. 189 இலட்சங்களால் மட்டுமே அதிகரித்துள்ளது. இதற்குச் சீனி விற்பனையின் மீதான இலாபத்தின் (ரூ. 324 இலட்சம்) குறிப்பிடத்தக்களவு உயர்வே காரணமாகும். 1964/65இல் இருந்த விலைகளின் மட்டத்துடன் ஒப்பு நோக்கும்பொழுது 1965/66இல் சீனியின் இறக்குமதி விலையில் ஏற்பட்ட கூரிய வீழ்ச்சி மூலம், இவ்விரு வருடங்களிலும் நுகர்வோருக்கான விற்பனைவிலை மாற்றமுருதிருந்ததனுல், சீனி விற்பனையில் பெருமளவு இலாபத்தைச் சம்பாதிக்க முடிந்தது. சீனியினது சராசரி இறக்குமதி விலையானது (கொள்விலையும் கப்பற்கூலியும்) 1965/66இல் தொன்னுக்கு ரூ. 111ஆல் குறைந்து ரூ. 490ஆக இருந்தது.

**மூலதனச் செலவு :**

அட்டவணை 11 (உ) 3இல் காட்டப்பட்டுள்ளபடி 1965/66ற்குரிய உண்மை (தற்காலிக) மூலதனச் செலவு ரூ. 6324 இலட்சமாகும். இத்தொகை அரசாங்கக் கணக்குகளில் உள்ள வாக்குகள் 3, 5, 7 இன் கீழான மொத்தச் செலவையும், 1, 2, 4, 6 ஆகிய வாக்குப் பணங்களில் உள்ளடக்கப்பட்ட மூலதனத் தன்மைத்தான செலவையும், தேயிலை, இரப்பர் புனர்நடுகை மானிய நிதிகள் போன்ற வரவு செலவுத் திட்டத்திற்கப்பாற்பட்ட நிதிகளிலிருந்து அறவிடப்பட்ட செலவையும் உள்ளடக்கும். இவ்விதமாக வரையறுக்கப்பட்ட மொத்த மூலதனச் செலவு, 1964/65இன் தொடர்பான தொகையிலும் பார்க்க ரூ. 522 இலட்சத்தால் கூடியிருக்கின்றது. இம்மூலதனச் செலவின் அதிகரிப்பு பிரதானமாக மெய்ச் சொத்துக்களை கொள்ளுதல், ஆக்குதல், பராமரித்தலின் (ரூ. 447 இலட்சம்) பேரிலேயே ஏற்பட்டதாகும். 1964/65இலும் பார்க்க 1965/66ம் ஆண்டில் கொள்ளப்பட்ட நிதிச் சொத்துக்களின் பெறுமானம் ரூ. 75 இலட்சம் மட்டுமே கூடுதலாக இருந்தது. [1]

மேலும் ஆராயின் மூலதனச் செலவின் அதிகரிப்பு, கிட்டத்தட்ட முழுவனே பொருளாதாரச் சேவைகளின் மீதேயே (ரூ. 571 இலட்சம்) ஏற்பட்டது தெரியக்கூடியதாயுள்ளது. இப்பொருளாதார சேவைகள் என்ற பகுப்பின் கீழ் விவசாயத்திலும், நீர்ப்பாசனத்திலுமான செலவு ரூ. 300 இலட்சத்தினுலும், மீன்பிடித் தொழிலின் மீதான செலவு ரூ. 275 இலட்சத்தினுலும், போக்குவரத்து மீதான செலவு ரூ. 202 இலட்சத்தினுலும் உயர்ந்துள்ளது. இதற்கு எதிர்மாறாகச் சமூக சேவைகளின் மீதான செலவானது வீடமைப்பு, கல்வி மீதான மூலதனச் செலவுகள் வீழ்ந்ததன் காரணத்தினுல் ரூ. 193 இலட்சத்தால் குறைவுற்றது.

**முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகள் :**

1965/66இல் முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகள் ரூ. 112 இலட்சம் தேறிய கொடுப்பனவைக் காட்டின. 1964/65இல் அவை ரூ. 279 இலட்சம் கொண்ட தேறிய வரவுகளைக் காட்டியிருந்தன. தற்போது கிடைக்கப்பெறும் தகவல்களின்படி, இக்கணக்குகளின் விபரங்களைத் தரமுடியவில்லை. எனினும் இத்தேறிய கொடுப்பனவானது பிரதானமாக அரசாங்கத் திணைக்களங்களுக்கு வழங்கப்பட்ட முற்பணங்களின் ஒரு திருப்பிக் கொடுப்பனவினுல் ஓரளவு ஈடு செய்யப்பட்ட அரசாங்கக் களஞ்சியத் திணைக்களத்தின் கையிருப்புகளின் அதிகரிப்பினுலும் சீனுவுடன் செய்த இரப்பர்/அரிசி ஒப்பந்தத்தின் படி இலங்கைக்குச் சாதகமாக அமைந்த மிச்சத்தில் ஏற்பட்ட அதிகரிப்பினுல் ஏற்பட்டதாம்.

1. பின்னிணைப்பு 11, அட்டவணை 21இல் தரப்பட்டுள்ள விபரங்களின் அடிப்படையில்.

**தேறிய பணக்குறை**

1965/66 நிதி ஆண்டிற்கான தேறிய பணக்குறையாகிய ரூ. 5659 இலட்சமே இதுவரை பதியப்பட்டவையில் ஆகக்கூடியதாகும். முந்திய நிதிவருடத்திற்குரிய தேறிய பணக்குறையுடன் ஒப்பிடும்பொழுது, இது ரூ. 1355 இலட்சம் (அல்லது 31 சதவீதம்) கொண்ட அதிகரிப்பைக் காட்டுகின்றது. இதற்கு மீண்டெழும் செலவில் ஏற்பட்ட ரூ. 571 இலட்சம் அதிகரிப்பும் மூலதன வாக்குப் பணங்களிலிருந்து அறவிடப்படும் செலவில் ஏற்பட்ட ரூ. 565 இலட்ச அதிகரிப்பும், அரசிறையில் ஏற்பட்ட ரூ. 168 இலட்சம் அதிகரிப்பினால் ஓரளவு தேற்றப்பட்ட, முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகளிலிருந்து செய்யப்பட்ட கொடுப்பனவுகளின் ரூ. 391 இலட்சம் அதிகரிப்பும் காரணமாம்.

1965/66ற்கான உண்மை (தற்காலிக தேறிய பணக்குறையும், அவ்வருடத்திற்கான மூலமதிப்பீட்டிலும் ரூ. 1045 இலட்சத்தால் உயர்ந்து இருந்தது. இது முந்திய நிதி வருடத்தில், மூல மதிப்பீடுகளின் படியான பணக்குறையிலும் பார்க்க உண்மையான தேறிய பணக்குறையானது ரூ. 704 இலட்சத்தினால் குறைந்திருந்த அமைப்பிற்கு, எதிர் மாறாக உள்ளது. 1965/66ற்கான உண்மைத் தேறிய பணக்குறை, அதே வருட மூல மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் காட்டும் அதிகரிப்பானது, அரசிறை வருவாய்களில் ஏற்பட்ட ரூ. 646 இலட்சம் கொண்ட குறைவினதும், செலவில் ஏற்பட்ட ரூ. 402 இலட்சம் கொண்ட அதிகரிப்பினதும்[1] இணைந்த விளைவாகும். செலவில் ஏற்பட்ட அதிகரிப்பானது, மூலமதிப்பீட்டுத் தொகையிலும் ரூ. 504 இலட்சத்தால் குறைவுற்ற மூலதனச் செலவினால் ஓரளவு தேற்றப்பட்ட மீண்டெழும் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பாகிய ரூ. 794 இலட்சத்தினாலும்[2] முற்பணக்கணக்கு தொழிற்பாடுகளின் மீதான தேறிய கொடுப்பனவாகிய ரூ. 112 இலட்சத்தினாலும் ஏற்பட்டது.

**பணக்குறையின் நிதியீட்டம்**

நிதியீட்ட மூலங்களையும், தேறிய பணக்குறையின் விரிவுத் தாக்கத்தையும், முந்திய நிதியாண்டிற்குரிய ஒப்பியல்பான தரவுடன் பின்வரும் அட்டவணை 11 (உ) 6 காட்டுகின்றது.

1965/66 நிதியாண்டில் நிதித் தொழிற்பாடுகளிலிருந்து விளைந்த தேறிய பணக் குறையான ரூ. 5659 இலட்சத்திற்கு உள்நாட்டுச் சந்தை வங்கியல்லா மூலங்களிலிருந்து ரூ. 2559 இலட்சம் கடன் பெற்றும், வங்கித் தொழில் முறையிலிருந்து ரூ. 1623 இலட்சம் கடன் பெற்றும், அந்நிய உதவியாக ரூ. 1180 பெறப்பட்டும், உள்நாட்டு சந்தையல்லா மூலங்களிலிருந்து ரூ. 1121 இலட்சங்கள் பெற்றும் நிதியீட்டப்பட்டது. பண மிச்சங்கள் (இணைக்கிணை நிதிகள் உட்பட) ரூ. 824 இலட்சத்தால் அதிகரித்தன.

இப்பிரிவில் முன்னேரிடத்தில் கூறப்பட்டுள்ள காரணங்களினால் 1965/66ற்கான தேறிய பணக்குறையானது, முந்திய நிதிவருட தேறிய பணக்குறையுடன் ஒப்பிடுமிடத்து ரூ. 1355 இலட்சத்தால் அதிகரித்துள்ளது. அரசாங்க நிதித் தொழிற்பாடுகளின் விரிவுத் தாக்க அங்கத்தினது அளவில் ஏற்பட்ட அதிகரிப்பானது[3] (ரூ. 877 இலட்சம்), தேறிய பணக்குறையில் ஏற்பட்ட அதிகரிப்பினளவிலும் குறைவாக இருப்பினும், கணிசமான அள வில் உள்ளது. மேலும் தேறிய பணக் குறையின் விகிதாச்சாரமாக தேறிய, பணக் குறையின் விரிவுத்தாக்க அங்கத்தை எடுத்துக்கொள்ளின் அவ்விகிதாச்சாரம் 1964/65லான 8.1 சதவீதத்திலிருந்து 1965/66 இல் 21.6 சத வீதத்திற்கு உயர்ந்துள்ளது. இதற்கு பண

---

1. முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகளின் மீதான தேறிய செலவையும் உள்ளடக்கி.
2. மூல மதிப்பீடுகளிலுள்ள மீண்டெழும் வாக்குப் பணங்களில் 2½ சதவீத குறைசெலவிற்கு இடமளித்து.
3. ஐக்கிய அமெரிக்க உதவியினால் எழுந்த இணைக்கிணை நிதிகளில் ஏற்பட்ட மாற்றங்களுக்காக சீர்செய்து.

## அட்டவணை II (உ) 6

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1964/65 | | | 1965/66 (தற்காலிகமான) | | |
|---|---|---|---|---|---|---|
| **1. அந்நிய நிதியீட்டம்** | | | | | | |
| (அ) கடன்கள் | | | | | | |
| (i) கடன் வாங்கிய மொத்தத்தொகை... | 92·8 | | | 112·4 | | |
| (ii) ஆழ்நிதி உதவு தொகைகளையும், திருப்பிக் கொடுக்கப்பட்டவையும்நீக்கி | 17·2 | 75·6 | | 35·9 | 76·5 | |
| (ஆ) நன்கொடைகள் ... | | 24·1 | 99·7 | | 41·5 | 118·0 |
| 2. உள்நாட்டுச் சந்தையல்லாக் கடன்பாடு ... | | | 50·3 | | | 112·1 |
| 3. வங்கித் தொழில் முறையிலிருந்து உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடு ... | | | 17·7 | | | 162·3 |
| 4. வங்கிகள் அல்லா மூலங்களிலிருந்து உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடு | | | | | | |
| (அ) கடன் பெற்ற மொத்தத் தொகை ... | | 294·4 | | | 314·8 | |
| (ஆ) ஆழ்நிதி உதவுதொகைகளை நீக்கி ... | | 51·2 | 243·2 | | 58·9 | 255·9 |
| 5. அரசாங்கப் பணமிச்சங்களினதும், பொருளுதவி இணைக்கிணை நிதிகளினதும் வீழ்ச்சி. | | | | | | |
| (அ) பண மிச்சங்கள் ... | | 19·5 | | | —47·2* | |
| (ஆ) பொருளுதவி இணைக்கிணை நிதிகள் ... | | — | 19·5 | | —35·2* | —82·4* |
| 6. தேறிய பணக்குறை | | | 430·4 | | | 565·9 |
| 7. ஐக்கிய அமெரிக்க உதவியால் எழுந்த இணைக்கிணை நிதிகளின் வீழ்ச்சி ... | | | —2·5* | | | 42·5 |
| 8. அரசாங்க நிதி இயக்கங்களின் தேறிய விரிவுத்தாக்கம் (3+5+7) ... | | | 34·7 | | | 122·4 |

* அடையாளம் அதிகரிப்பைக் குறிக்கும்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

மிச்சங்களினதும் இணைக்கிணை நிதிகளினதும் அதிகரிப்பினால் ஓரளவு மட்டுமே தேற்றப்பட்டதான வங்கித் தொழில் முறைக் கடன்பாடுகளின் மீதான அதிகரித்த தங்கியிருப்பே பெருமளவு காரணமாக அமைகின்றது.

1965/66 இல் வங்கித் தொழில் முறையிலிருந்து பெற்ற கடன் தொகையான ரூ. 1623 இலட்சம் முழுவதும் மத்திய வங்கியிடமிருந்தே பெறப்பட்டதாகும். மத்திய வங்கியிடமிருந்து பெற்ற கடன்பாடு ரூ. 1797 இலட்சத்தால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பு, ரூ. 1514 இலட்சம் கொண்ட திறைசேரி உண்டியல்களது கொள்வனவின் மூலமும், அரசாங்கத்திற்கான மத்திய வங்கி முற்பணங்களின் ரூ. 283 இலட்சம் கொண்ட அதிகரிப்பின் மூலமும் பெறப்பட்டது. மறுபுறத்தில், முந்திய நிதிவருட அமைப்பிற்கு முரணான முறையில், வர்த்தக வங்கிகளிடமிருந்து பெற்ற கடன் பாடுகளில் ஒரு தேறிய வீழ்ச்சி ஏற்பட்டது. இவ் வர்த்தக வங்கித் தொழிலமைப்புக் கடன்பாட்டினது வீழ்ச்சியானது (ரூ. 174 இலட்சம்), வர்த்தக வங்கிகளது வரி ஒதுக்குப் பத்திர உடைமைகளில் ஏற்பட்ட ரூ. 1 இலட்சம் கொண்ட அதிகரிப்பினால் ஓரளவு தேற்றப்பட்ட, இறைசேரி உண்டியல்களினதும் அரசாங்கப் பிணைகளினதும் உடைமைகளில் ஏற்பட்ட வீழ்ச்சிகளின் (முறையே ரூ. 159 இலட்சம், ரூ, 16 இலட்சம்) இணைந்த விளைவேயாகும்.

வங்கிகளல்லா மூலங்களிலிருந்து பெற்ற தேறிய சந்தைக் கடன்பாட்டின் எண்தொகை 1965/66 இல் ரூ. 2559 இலட்சமாக இருந்து, 1964/65திற்குரிய தொகையிலும் (ரூ. 2432 இலட்சம்) சிறிதளவு திருத்தத்தைக் காட்டியது. 1959/60 தொடங்கி 1964/65 வரைக்குமான ஐந்து வருட காலப் பகுதியில் வங்கிகளல்லா துறையின் உள்நாட்டுச் சந்தையின் உதவுதொகைகள் சராசரி ரூ. 313 இலட்ச வருடாந்த அதிகரிப்பைக் காட்டியுள்ளன. இதிலிருந்து, 1965/66 ல் இத்துறையின் உதவு தொகைகள் தொகையளவில் கூடியிருப்பினும், கடந்த ஐந்து நிதி வருடங்களுக்கான இத்துறையின் வருடாந்த சராசரி அதிகரிப்பிற்குச் சமனாக இருக்கவில்லை என்பது தெரியக்கிடக்கின்றது.

1965/66க்குரிய விரிவடைந்த மொத்தத் தொகையில், காப்புறுதிக்கூட்டுத்தாபனம், ஊழியர் சேமநிதி தவிர்ந்த ஏனைய சேமநிதிகள், கூட்டு நிலையங்களும் சங்கங்களும், தனியாட்களும் ஆகிய தொகுதிகள் தமது உதவு தொகைகளின் பங்குகளினை அதிகரித்திருக்கின்றன. 1965/66 இல் அரசாங்கப்பிணைகளின் (இறைசேரி உண்டியல்களும், வரி ஒதுக்குப் பத்திரங்களும் உட்பட) பிரதான முதலீட்டுத் தொகுதிகளினது உதவு தொகைகள், முந்திய மூன்று நிதி வருடங்களுக்குமான தொடர்பான தரவுகளுடன் அட்டவணை II (உ) 7 இல் தரப்பட்டிருக்கின்றது.

### அட்டவணை II (உ) 7

### பிரதான வங்கிகள் அல்லாத முதலீட்டுத் தொகுதிகளில், அரசாங்கப் பிணைகளுக்கான உதவு தொகைகள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1962/63 | 1963/64 | 1964/65 | 1965/66 | 1964/65 இலும் மேலாக 1965/66இல் அதிகரிப்பு |
|---|---|---|---|---|---|
| 1. சேமிப்பு நிறுவனங்கள் ... | 14·3 | 28·9 | 37·9 | 37·0 | – 0·9 |
| 2. ஊழியர் சேமநிதி ... | 61·7 | 65·6 | 70·0 | 74·7 | 4·7 |
| 3. காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ... | 16·4 | 29·0 | 42·2 | 46·2 | 4·0 |
| 4. ஏனைய அரசாங்க கூட்டுத்தாபனங்கள் | — | 3·5 | — | — | — |
| 5. திணைக்கள, ஏனைய அலுவலக நிதிகள் ... | 6·5 | 9·6 | 13·8 | 2·0 | –11·8 |
| 6. ஏனைய சேம, இளைப்பாறற் சம்பள நிதிகள் ... | 31·2 | 22·0 | 28·4 | 41·1 | 12·7 |
| 7. ஏனைய காப்புறுதி நிதிகள் ... | 6·0 | 7·6 | 3·4 | 10·3 | 6·9 |
| 8. கூட்டு நிலையங்களும், சங்கங்களும் நிறுவனங்களும் ... | 5·1 | 12·3 | –2·1 | 6·1 | 8·2 |
| 9. தனியாட்கள் ... | 0·1 | 1·2 | 2·7 | 15·2 | 12·5 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

### அந்நிய நிதி

மூலதனச் செலவிற்கென கிடைத்த அந்நிய உதவி 1965/66 இல் ரூ. 1539 இலட்சமாக விளங்கியது. 1963/64, 1964/65 ஆண்டுகளில் இது முறையே ரூ. 1076 இலட்சமாகவும், ரூ. 1169 இலட்சமாகவும் இருந்தது. ஸ்டேர்லிங் கடன் ஆழ்நிதி உதவு தொகைகளும் மற்றைய கடன் திருப்பிக் கொடுப்பனவுகளும் இம் மூன்று வருடங்களில், 1965/66இல் ரூ. 359 இலட்சமாகவும், 1964/65 இல் ரூ. 172 இலட்சமாகவும் 1963/64 இல் ரூ. 122 இலட்சமாகவும் இருந்தன.

தன்மையினைப் பொறுத்தும், மூலத்தினைப் பொறுத்தும் பகுக்கப்பட்ட அந்நிய உதவி வரவுகள் விபரம் அட்டவணை II (உ) 8இல் தரப்பட்டுள்ளது. 1965/66 நிதி வருடத்தில் அந்நிய கடன்களினதும், நன்கொடைகளினதும், தேறிய வரவு 183 இலட்சம் ரூபாய்கள் கொண்ட குறிப்பிடத்தக்க உயர்ச்சியைக் காட்டிற்று.

### பொதுப்படுகடன்

பொதுப்படுகடன் பற்றி தரவுகள் பின்னிணைப்பு IIன் அட்டவணைகள் 23,24இல் தரப்பட்டுள்ளன. கடந்த ஐந்து நிதியாண்டுகளின் முடிவிற்கான மொத்தப் பொதுப்படு கடனின் (மொத்தமும், தேறியதும்) உள்ளூர், அந்நிய பாகங்களினது முக்கியத்துவம் அட்டவணை II (உ) 9 இல் தரப்பட்டு கீழ்வரும் பகுதிகளில் ஆராயப்பட்டுள்ளது.

நிதி வருடப் போது மொத்தக் கடனிலும், தேறிய கடனிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் முறையே ரூ. 5585 இலட்சமும், ரூ. 4957 இலட்சமும் ஆகும். முந்திய நிதி வருடத்தின் தொடர்பான எண் தொகைகள் ரூ. 3974 இலட்சமும் ரூ. 3359 இலட்சமும் ஆகும். மொத்தக் கடனின் அதிகரிப்பாகிய ரூ. 558 இலட்சமானது ரூபாப் பிணைகளின் ரூ. 3250

## அட்டவணை II (உ) 8

### மூலதனச் செலவிற்கான அந்நிய உதவி வரவுகள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1961/62 தேறிய வரவுகள் | 1962/63 தேறிய வரவுகள் | 1963/64 தேறிய வரவுகள் | 1964/65 தேறிய வரவுகள் | 1965/66 கிடைக்கப் பட்ட தொகை | 1965/66 திருப்பிக் கொடுக்கப் பட்ட தொகை | 1965/66 தேறிய வரவுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| **கடன்கள்** | | | | | | | |
| 1. ச. பு. அ. வ. ... | 25·6 | 21·2 | 11·3 | 5·0 | 5·3 | 6·5 | –1·2 |
| 2. கனடா ... | –1·3 | 0·8 | –0·2 | 11·4 | 7·6 | 5·1 | 2·5 |
| 3. சீனு ... | –1·0 | — | 12·4 | 18·9 | 13·8 | 4·0 | 9·7 |
| 4. ஐக்கிய இராச்சியம் ... | 0·4 | 10·4 | 4·9 | –2·3 | 23·7 | 13·0 | 10·6 |
| 5. ஐக்கிய அமெரிக்கா ... | 7·6 | –0·7 | 2·7 | –1·2 | 25·1 | 1·3 | 23·8 |
| 6. ருஷ்யா ... | 3·4 | 13·5 | 32·0 | 28·8 | 9·4 | 0·2 | 9·3 |
| 7. மேற்கு ஜெர்மனி ... | — | 11·5 | 0·4 | 7·4 | 11·0 | 4·3 | 6·7 |
| 8. யுகோசிலேவியா ... | — | 4·3 | ... | –0·3 | 1·7 | 0·9 | 0·8 |
| 9. போலந்து ... | — | — | — | 2·4 | 0·7 | 0·5 | 0·1 |
| 10. பிரான்சு ... | — | — | — | 5·5 | 1·6 | — | 1·6 |
| 11. ஜப்பான் ... | — | — | — | — | 10·0 | — | 10·0 |
| 12. இந்தியா ... | — | — | — | — | 2·6 | — | 2·6 |
| **நன்கொடைகள்** | | | | | | | |
| கொழும்புத்திட்டம் ... | | | | | | | |
| 1. அவுஸ்திரேலியா ... | — | 2·5 | — | 3·9 | 0·3 | | 0·3 |
| 2. கனடா ... | 4·4 | 5·7 | 5·7 | 5·1 | 25·6 | | 25·6 |
| 3. ஜப்பான் ... | — | — | 0·3 | — | — | | — |
| ஏனைய | | | | | | | |
| 1. சீனு ... | 8·3 | 19·7 | 24·5 | 15·1 | 2·5 | | 2·5 |
| 2. ஐக்கிய அமெரிக்கா ... | 1·6 | 0·9 | 1·4 | ... | 12·1 | | 12·1 |
| 3. மேற்கு ஜெர்மனி ... | 3·8 | 2·3 | — | — | — | | — |
| 4. ஐக்கிய நாடுகள் ... | — | — | — | — | 1·0 | | 1·0 |
| கடன்களினதும் நன்கொடைகளினதும் மொத்தம் ... | 52·9 | 92·0 | 95·4 | 99·7 | 153·9 | 35·9 | 118·0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

இலட்ச அதிகரிப்பையும், இறைசேரி உண்டியல்களின் ரூ. 1250 இலட்ச அதிகரிப்பையும், அந்நிய கடனின் ரூ. 595 இலட்ச அதிகரிப்பையும் மத்திய வங்கி முற்பணங்களின் ரூ. 495 இலட்ச அதிகரிப்பையும் கொண்டுள்ளது. இவ்வதிகரிப்புக்கள் வரி ஒதுக்குப் பத்திரங்களில் ஏற்பட்ட ரூ. 5 இலட்ச குறைப்பினுல் தேற்றப்பட்டன. 1965/66இல் மொத்தப் பொதுப்படுகடனில் (மொத்தமும், தேறியதும்) ஏற்பட்ட அதிகரிப்பு, கடந்த நான்கு நிதி வருடங்களின் போது ஏற்பட்ட அதிகரிப்புக்கள் யாவற்றிலும் உயர்வாக அமைந்துள்ளது.

கவனத்திற்கெடுத்துக் கொள்ளப்பட்ட கடந்த ஐந்து வருடங்களிலும் மொத்தக் கடனின் தேறிய அந்நிய கடன் பகுதியானது 9.6 சதவீதத்திலிருந்து 12.2 சதவீதத்திற்கு மட்டுமே அதிகரித்திருப்பினும், தொகையளவில் அது இருமடங்காகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இதே காலப்பகுதியில் தேறிய உள்ளூர்க் கடன் ஒன்றரை மடங்கால் மட்டுமே அதிகரித்துள்ளது.

#### உள்ளூர்க் கடன்

1965, செத்தெம்பர் 30ம் தேதியில் ரூ. 36955 இலட்சமாக விளங்கிய மொத்த உள்ளூர் கடனுனது, ரூ. 4990 இலட்சத்தால் அதிகரித்து 1965/66 நிதி வருட முடிவில் ரூ. 41945 இலட்சமாக விளங்கியது. அத் திகதியின்போதான கடனின் அமைப்பு பின்வருமாறு:- ரூபாப்பிணைகள் ரூபா 24746 இலட்சம், இறைசேரி உண்டியல்கள் ரூ. 14250 இலட்சம், வரி ஒதுக்குப் பத்திரங்கள் ரூ. 322 இலட்சம், மத்திய வங்கி முற்பணங்கள் ரூ. 2626 இலட்சம், தேசிய அபிவிருத்திப் பிணைகள் ரூ. 1 இலட்சம். 1965/66 ஆகிய இரு ஆண்டுகளிலும்

## அட்டவணை II (உ) 9

### மொத்தப் பொதுப்படு கடன் (1)

| செத்தெம்பர் முடிவில் | மொத்தத்துடன் | | | | | தேறிய கடன் (2) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 |
| (அ) பெறுமானங்கள் (பத்து இலட்சம் ரூபாய்களில்) | | | | | | | | | | |
| அந்நிய ... | 345·2 | 407·1 | 412·1 | 489·3 | 548·8 | 259·1 | 311·5 | 373·5 | 446·6 | 521·1 |
| உள்ளூர் ... | 2,693·7 | 3,030·2 | 3,375·3 | 3,695·5 | 4,194·5 | 2,429·8 | 2,753 9 | 3,062·5 | 3,325·3 | 3,746·5 |
| மொத்தம் ... | 3,038·9 | 3,437·3 | 3,787·4 | 4,184·8 | 4,743·3 | 2,688·9 | 3,065·4 | 3,436·0 | 3,771·9 | 4,267·6 |
| (ஆ) சதவீதங்கள் | | | | | | | | | | |
| அந்நிய ... | 11·4 | 11·8 | 10·9 | 11·7 | 11·6 | 9·6 | 10·2 | 10·9 | 11·8 | 12·2 |
| உள்ளூர் ... | 88·6 | 88·2 | 89·1 | 88·3 | 88·4 | 90·4 | 89·8 | 89·1 | 88·2 | 87·8 |
| மொத்தம் ... | 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 100·0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(1) 1966 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதத்தில் இருந்த தேசிய வீடமைப்புக் கடன் முறிகளாகிய ரூபாய் 750 இலட்சமும், தேசிய ஈட்டு வங்கி கடன் முறிகளாகிய ரூ. 333 இலட்சமும் நீங்கலாக.

(2) அதாவது ஆழ்நிதிகளின் பெறுமானத்தை நீக்கி.

1965,1966 செத்தெம்பர் 30ம் தேதியிலுள்ளபடியான பொதுப்படுகடனின் அமைப்பினை யும், மாற்றங்களினையும் பற்றிய தரவினை அட்டவணை 11 (உ) 10 தருகின்றது.

**அட்டவணை II (உ) 10**

**உள்ளூர் பொதுப்படுகடனின் அமைப்பு**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| செத்தெம்பர் முடிவில் உள்ளபடி | ரூபாய்க்கடன்கள் | | | திறைசேரி உண்டியல்கள் | வரி ஒதுக்குப் பத்திரங்கள் | மத்திய வங்கி முற்பணங்கள் (2) | தேசிய அபிவிருத்திப் பிணைகள் (3) | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | ஆழ்நிதிகள்(1) | தேறிய | | | | | மொத்த | தேறிய |
| **1965** | **2149·6** | **370·2** | **1779·4** | **1300·0** | **32·7** | **213·1** | **0·1** | **3695·5** | **3325·8** |
| **1966** | **2474·6** | **448·0** | **2026·6** | **1425·0** | **32·2** | **262·6** | **0·1** | **4194·5** | **3746·5** |
| மாற்றம்(4) | **+325·0** | **77·8** | **+247·2** | **+125·0** | **—0·5** | **+49·5** | — | **499·0** | **421·2** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1. ஆழ்நிதிகள் (துணையான ஆழ்நிதிகளையும் உள்ளடக்கிய) பெயரிற் கொள்ளப்பட்ட முதலீடுகளின் சந்தைப் பெறுமதியைக் குறிக்கும்.
2. ச. நா. நி., ச. பு. அ. வ., ச. அ. ச. ஆகிய மூன்று நிறுவனங்களுக்கும் இலங்கையின் உறுப்புரிமைக் கட்டணங்களின் கொடுப்பனவுக்காக 1965 செத்தெம்பரிலும், 1966 செத்தெம்பரிலும் முறையே வழங்கப் பட்ட ரூ. 612 இலட்ச ரூபாவையும், 824 இலட்சம் ரூபாவையும் கொண்ட விசேட கடன்களையும் அடக்கும். இச்சிறப்புக் கடன்களின் தொகையை நீக்கிக் கணிப்பின், மத்திய வங்கியின் முற்பணங்கள் ரூ. 283 இலட் சத்தால் இந்நிதியாண்டின்போது அதிகரித்தன.
3. 1965 செத்தெம்பர் மாதம் முடிவில் வெளியிடப்பட்டனவும், வெளிநின்றனவுமாகிய தேசிய அபிவிருத்திப் பிணைகளினது மொத்தப் பெறுமானம், ரூ. 70,802 ஆக விளங்கியது.
4. + அடையாளம் அதிகரிப்பைக் குறிக்கும்.

1966, செத்தெம்பர் 30ம் தேதிப் போதான பொதுப்படுகடனின் முதிர்ச்சி அமைப்பினை முந்திய நான்கு நிதியாண்டுகளுக்குரிய தொடர்பான தரவுகளுடன் அட்டவணை 11 (உ) 11 தருகின்றது. 1965ம் ஆண்டின் வருடாந்த அறிக்கையில், கடந்த இரு நிதி வருடங் களின்போது உள்ளூர்க் கடனின் கால அமைப்பு நீடித்தமைந்திருந்ததுபற்றி குறிப்பிடப் பட்டிருந்தது. 1965/66ம் ஆண்டிலும் இப்போக்கு தொடர்ந்தும் நீடித்தது. மொத்த உள் ளூர்க்கடனில், கடனின் முதிர்ச்சியின் இறுதித் திகதியிலிருந்து பதினைந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தினையுடைய கடன் 34.4 சதவீதமாக விளங்கி, நிதி வருடப்போது 2.6 சத வீதப்புள்ளிகள் கொண்ட உயர்வைக் காட்டிற்று. இதற்குத் தொடர்பான விதத்தில் நிதி யாக்கம் பெறுக் கடனின் பங்கு 0.8 சதவீதப் புள்ளிகளால் வீழ்ந்து, 1965 செத்தெம்பர் முடிவில் மொத்தத்தின் 41.0 சதவீதமாக விளங்கிற்று.

## ரூபாய்ப் பிணைகள்

1965/66ம் நிதி ஆண்டில் வெளியிடப்பட்ட 3512 இலட்சம் தொகை கொண்ட பன்னி ரண்டு ரூபாய்க் கடன்களில் 262 இலட்சம் தொகை கொண்ட இரண்டு கடன்கள் மாற்றுக் கடன்களாகவும், 5-7 வருட $3\frac{1}{2}$ சதவீத வட்டியுடனான 79 இலட்சம் ரூபாய் கொண்டதோர் கடன் பணவெளியீடாகவும் இருந்தது. 3171 இலட்சம் ரூபாத் தொகையுள்ள எஞ்சிய ஒன்பது (21-25 வருட) கடன்களும் $4\frac{1}{2}$ சதவீத வட்டியுடனான பண வெளியீடுகளாக இருந் தன. மேற்குறிப்பிடப்பட்ட இரண்டு மாற்றுக் கடன்களில் ஒன்றான $3\frac{1}{2}$ சதவீத 1970/73 கடனானது $2\frac{1}{2}$ சதவீத 1963/65 ''பி'' தொடர் கடனை மாற்றிப் பெறப்பட்டதொன்றாகும். மற்றைய $3\frac{1}{4}$ சதவீத 1969/71 கடனானது வருடத்தின் போது முதிர்ச்சி அடைந்த 3 சத வீத 1964/66 கடனை மாற்றிப் பெறப்பட்டதாகும். ஏனைய பத்து வெளியீடுகளும் முற்றி லும் பணவெளியீடுகளாகவே இருந்தன. ஒதுக்கீடுகளின் பகுப்பொன்று அட்டவணை 11 (உ) 12ல் காட்டப்பட்டுள்ளது.

## அட்டவணை II (உ) 11

### உள்ளூர்க் கடன் - முதிர்ச்சியின்படியான பகுப்பு

(செத்தெம்பர் முடிவில் உள்ளபடி)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| முதிர்ச்சியின் ஆண்டுகள் | 1962 | | 1963 | | 1964 | | 1965 | | 1966 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் |
| நிதியாக்கம் பெருக்கடன்† ... | 1,178·4 | 43·7 | 1,346·6 | 44·4 | 1,465·9 | 43·4 | 1,545·9 | 41·8 | 1,719·8 | 41·0 |
| நிதியாக்கம் பெற்ற கடன்* 5 ஆண்டுகளுக்குள் ... | 272·7 | 10·1 | 246·2 | 8·1 | 205·8 | 6·1 | 245·5 | 6·6 | 292·1 | 7·0 |
| 5–10 ஆண்டுகளுக்கிடையில்* ... | 229·5 | 8·5 | 365·4 | 12·1 | 445·0 | 13·2 | 392·3 | 10·6 | 354·5 | 8·5 |
| 10–15 ஆண்டுகளுக்கிடையில்* ... | 180·2 | 6·7 | 222·9 | 7·4 | 216·6 | 6·4 | 336·6 | 9·1 | 386·0 | 9·2 |
| 15–20 ஆண்டுகளுக்கிடையில்* ... | 386·0 | 14·3 | 249·1 | 8·2 | 247·0 | 7·3 | 127·1 | 3·4 | 324·1 | 7·7 |
| 20 ஆண்டுகளுக்கு மேலானவை* ... | 446·8 | 16·6 | 600·0 | 19·8 | 795·0 | 23·6 | 1,048·1 | 28·4 | 1,118·0 | 26·7 |
| மொத்தம் ... | 2,693·7 | 100·0 | 3,030·2 | 100·0 | 3,375·3 | 100·0 | 3,695·5 | 100·0 | 4,194·5 | 100·0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

† திறைசேரி உண்டியல்கள், வரி ஒதுக்குச் சான்றிதழ்கள், மத்திய வங்கி முற்பணங்கள், அத்துடன் தேசிய அபிவிருத்திப் பிணைகள் ஆகியவற்றை உள்ளடக்கும்.

* முதிர்ச்சி அடையும் கடைசித் தேதியின்படி.

## அட்டவணை II (உ) 12

### அரசாங்கப் பிணைகளுக்கு எதிராகப்பெற்ற கட்டணப் பாகுபாடு 1965/66

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 4½% கடன் 1986/90 'ஜி' தொடர் | 4½% கடன் 1986/90 'எச்' தொடர் | 3½% கடன் 1970/73* மாற்றம் | 3½% கடன் 1970/73* பணம் | 4½% கடன் 1987/91 | 4½% கடன் 1987/91 'பி' தொடர் | 3½% கடன் 1971/73 | 4½% கடன் 1987/91 'சி' தொடர் | 4½% கடன் 1987/91 'டி' தொடர் | 4½% கடன் 1987/91 'இ' தொடர் | 4½% கடன் 1987/91 'எவ்' தொடர் | 3½% கடன் 1969/71** மாற்றம் | 3½% கடன் 1969/71** பணம் | 4½% கடன் 1987/91 'ஜே' தொடர் | மொத்தம் தொகை | மொத்தம் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வர்த்தக வங்கிகள் ... | — | — | 14·0 | 1·9 | — | — | 2·0 | — | — | — | — | ... | — | — | 17·9 | 5·1 |
| சேமிப்பு நிறுவனங்கள் ... | 5·5 | 2·5 | — | — | 2·5 | 6·2 | — | — | 3·5 | 8·0 | 6·0 | — | — | 3·0 | 37·2 | 10·6 |
| ஆழ்நிதிகள் ... | 12·0 | 16·8 | — | — | 12·5 | 4·3 | — | 10·2 | 14·5 | 3·5 | 14·4 | — | 6·6 | 9·7 | 104·5 | 29·8 |
| திணைக்கள நிதிகளும், ஏனைய அரசகரும நிதிகளும் | 0·7 | 0·3 | — | — | 1·0 | — | — | — | — | 1·5 | 0·2 | — | — | — | 3·7 | 1·1 |
| நம்பிக்கைச் சொத்துக்களும், உபகார இளைப்பாறற் சம்பள சேமநிதிகளும் | | | | | | | | | | | | | | | | |
| 1. ஊழியர் சேமநிதி ... | 6·3 | 7·0 | — | — | 10·2 | 7·9 | — | 8·5 | 6·4 | 11·0 | 9·2 | — | — | 8·1 | 74·6 | 21·2 |
| 2. ஏனையவை ... | 3·7 | 2·4 | 0·1 | ... | 3·5 | 6·5 | 0·1 | 3·7 | 3·0 | 3·9 | 2·8 | 0 6 | 0·5 | 8·4 | 39·2 | 11·2 |
| காப்புறுதி நிதிகள். | | | | | | | | | | | | | | | | |
| 1. காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 4·7 | 4·7 | — | — | 4·5 | 6·3 | — | 5·0 | 6·0 | 5·0 | 4·0 | — | — | 6·0 | 46·2 | 13·2 |
| 2. காப்புறுதிக் கூட்டு நிலையங்கள் | 0·9 | 0·3 | 0·3 | 1·5 | 0·2 | 2·0 | 1·5 | 0·2 | 0·9 | 1·3 | 0·3 | 0·1 | — | 1·1 | 10·6 | 3·0 |
| ஏனைய கூட்டு நிலையங்கள் ... | 0·2 | — | — | — | — | — | — | — | 0·1 | 0·1 | ... | — | — | 0·1 | 0·5 | 0·1 |
| தனியாட்களும் சங்கங்களும், நிலையங்களும் ... | 1·1 | 1·0 | — | 0·6 | 0·6 | 1·8 | 4·2 | 4·5 | 0·7 | 0·7 | 0·6 | 0·1 | ... | 1·1 | 17·0 | 4·8 |
| **மொத்தம்** ... | 35·0 | 35·0 | 14·4 | 4·0 | 35·0 | 35·0 | 7·9 | 32·1 | 35·0 | 35·0 | 37·5 | 0·7 | 7·1 | 37·5 | 351·2 | 100·0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* 1965 திசெம்பரிலே திருப்பிக் கொடுப்பதற்கான 1963/65 2½ சதவீத இலங்கை அரசாங்கக் கடனை மாற்றிப் பெறப்பட்டது.

** 1966 ஓகத்திலே திருப்பிக் கொடுப்பதற்கான 1964/66 3 சதவீத இலங்கை அரசாங்கக் கடனை மாற்றிப் பெறப்பட்டது.

அட்டவணை 11 (உ) 12 இல் காட்டப்பட்டுள்ளபடி வெளியிடப்பட்ட கடன்களின் மொத்தத் தொகையில் 1045 இலட்சம் (29.8 சதவீதம்) ரூபாய்களை ஆழ்நிதிகள் கொண்டன. ஏனைய முக்கிய செலுத்து தொகைகள் பின்வருமாறு: ஊழியர் சேமநிதி ரூபாய் 746 இலட்சம் (21.2 சதவீதம்), காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ரூபாய் 462 இலட்சம் (13.2 சதவீதம்), நம்பிக்கை, உபகார, ஊழியர் சேமநிதி தவிர்ந்த ஏனைய சேமநிதிகள் ரூபாய் 392 இலட்சம் (11.2 சதவீதம்), சேமிப்பு நிறுவனங்கள் ரூபாய் 372 இலட்சம் (10.6 சதவீதம்).

1964/65, 1965/66 நிதி ஆண்டுகளுக்குரிய அரசாங்கப்பிணைகளின் ஒதுக்கீடுகளின் பகுப்பு, இவற்றிற்கு முந்திய இரண்டு நிதி வருடங்களுக்குரிய ஒப்பியல்பான தரவுடன் கீழ்த்தொடரும் அட்டவணை 11 (உ) 13 இல் தரப்பட்டுள்ளது.

## அட்டவணை II (உ) 13

### அரசாங்கப்பிணைகளின் ஒதுக்கீடுகளின் பகுப்பு

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1962/63 | | 1963/64 | | 1964/65 | | 1965/66 | | 1964/65 இல் இருந்து 1965/66 இன் மாற்றம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை பத்து இலட்சம் ரூபாய் களில் | % | தொகை பத்து இலட்சம் ரூபாய் களில் | % | தொகை பத்து இலட்சம் ரூபாய் களில் | % | தொகை பத்து இலட்சம் ரூபாய் களில் | % | |
| **வங்கித்துறை:** | | | | | | | | | |
| வர்த்தக வங்கிகள் ... | 25·4 | 11·5 | 33·0 | 10·5 | 1·0 | 0·4 | 17·9 | 5·1 | +16·9 |
| மாகாணக் கூட்டுறவு வங்கிகள் ... | 0·3 | 0·1 | — | — | — | — | — | — | — |
| **வங்கி தவிர்த்த துறை:** | | | | | | | | | |
| சேமிப்பு நிறுவனங்கள் | 17·3 | 7·8 | 79·9(1) | 25·4 | 38·8 | 14·7 | 37·2 | 10·6 | — 1·6 |
| ஆழ்நிதிகள் ... | 36·4 | 16·4 | 46·3 | 14·7 | 52·5 | 19·9 | 104·5 | 29·8 | +52·0 |
| திணைக்கள ஏனைய அரசகரும நிதிகள் ... | 7·5 | 3·4 | 21·4 | 6·8 | 14·4 | 5·5 | 3·7 | 1·1 | —10·7 |
| நம்பிக்கை, உபகார, இளைப்பாறற் சம்பள, சேமநிதிகள் | | | | | | | | | |
| 1. ஊழியர் சேமநிதி | 67·8 | 30·6 | 65·0 | 20·6 | 72·4 | 27·4 | 74·6 | 21·2 | + 2·2 |
| 2. ஏனைய ... | 36·6 | 16·5 | 25·8 | 8·2 | 31·5 | 11·9 | 39·2 | 11·2 | + 7·7 |
| காப்புறுதி நிதிகள் | | | | | | | | | |
| காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ... | 12·9 | 5·8 | 29·0 | 9·2 | 42·2 | 16·0 | 46·2 | 13·2 | + 4·0 |
| 2. காப்புறுதிக் கூட்டு நிலையங்கள் ... | 13·4 | 6·1 | 8·9 | 2·8 | 6·6 | 2·5 | 10·6 | 3·0 | + 4·0 |
| ஏனைய அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் ... | — | — | 3·5 | 1·1 | — | — | — | — | — |
| ஏனையகூட்டு நிலையங்கள்... | 0·8 | 0·4 | 0·3 | 0·1 | 0·2 | 0·1 | 0·5 | 0·1 | + 0·3 |
| தனியாட்களும், சங்கங்களும் நிலையங்களும்... | 3·2 | 1·4 | 1·7 | 0·5 | 4·6 | 1·7 | 17·0 | 4·8 | +12·4 |
| **மொத்தம்** ... | 221·3 | 100·0 | 315·0 | 100·0 | 263·9(2) | 100·0 | 351·2(3) | 100·0 | +87·3 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1. இத்தொகையில் 525 இலட்சம் ரூபாய்கள் 1974, 3 3/4 சதவீத மாற்றுக் கடனுக்கு வழங்கப்பட்ட உதவு தொகைகளைப் பிரதிபலிக்கிறது.

2. இத்தொகையில் 46 இலட்சம் ரூபாய் 1971, 3½ சதவீத மாற்றுக்கடனுக்கு வழங்கப்பட்ட உதவு தொகையும் 69 இலட்சம் ரூபாய் 1972, 3½ சதவீத மாற்றுக்கடனுக்கு வழங்கப்பட்ட உதவு தொகைகளையும் பிரதிபலிக்கின்றன.

3. இத்தொகையில் 184 இலட்சம் ரூபாய் 1970/73, 3½ சதவீத மாற்றுக்கடனுக்கு வழங்கப்பட்ட உதவு தொகைகளையும், 78 இலட்சம் ரூபாய் 1969/71, 3¼ சதவீத மாற்றுக்கடனுக்கு வழங்கப்பட்ட உதவு தொகைகளையும் பிரதிபலிக்கின்றன.

அரசாங்கப் பிணைகளுக்கான உதவு தொகைகளின் அமைப்பின் குறிப்பிடத்தக்க தொரு அம்சமென்னவெனில் தனியாட்கள், சங்கங்கள், நிறுவனங்கள் ஆகியோரினுல் கொள்ளப்பட்ட பிணைகளின் (சென்ற நிதிவருடத்தின் 1.7 சதவீதத்துக்கெதிராக மொத்தத் தொகையில் ரூபாய் 170 இலட்சம் அல்லது 4.8 சதவீதம்) விகிதாச்சாரத்தில் ஏற்பட்ட கூர்மை யான அதிகரிப்பேயாகும். இவ்வதிகரிப்பிற்கு, 1963ம் ஆண்டு உள்நாட்டு இறைவரிச்சட்டம் இலக்கம் 4இன் திருத்தம் மூலம் அரசாங்கப் பிணைகளின் மீது தனியாட்களால் செய்யப் படும் முதலீடு அங்கீகரிக்கப்பட்ட சேமிப்புக்களாக ஆக்கப்பட்டமையே காரணமாகும். இச் சட்டத்தின் 69 அ பகுதியின் கீழேயே இவ்வித முதலீடுகள் அங்கீகரிக்கப்பட்ட சேமிப்பு களாகக் கொள்ளப்பட்டு வரி நிவாரணத்திற்கு தகுதிவாய்ந்தனவாகின்றன. இதனை 1966 மாச்சு/ஏப்பிறல் இல் வெளியிடப்பட்ட 4 சதவீத (21 தொடங்கி 25 வருடம்) கடனினதும், $3\frac{1}{2}$ சதவீத (5 தொடங்கி 7 வருடம்) கடனினதும் ஒதுக்கீடு நன்கு சித்தரித்துக் காட்டுகின்றது.

1963ம் ஆண்டு யூன் 1ம் தேதியில் ஆண்டு ஒன்றிற்கு $4\frac{1}{4}$ சதவீதத்திலிருந்து $4\frac{1}{2}$ சத வீதத்திற்கு உயர்த்தப்பட்ட, நீண்டகால (21 தொடங்கி 25) அரசாங்கக் கடன்களின் வட்டி விகிதம், அதே மட்டத்திலேயே தொடர்ந்தும் இருந்தது.

### திறைசேரி உண்டியல்கள்

நிதி ஆண்டின் தொடக்கத்தில் வெளிநின்ற திறைசேரி உண்டியல்களின் தொகை ரூபாய் 13000 இலட்சமாகவும் அங்கீகரிக்கப்பட்ட வரையறவு ரூபாய் 15000 இலட்சமாகவும் இருந்தது. நிதி ஆண்டு முடிவில் வெளிநின்ற திறைசேரி உண்டியல்களின் தொகை ரூபாய் 14250 இலட்சமாக விளங்கி, நிதி ஆண்டின் போது ரூபாய் 1250 இலட்சம் அதிகரிப் பைக்காட்டியது. எனவே திறைசேரி உண்டியல்களின் வெளியீடுகளினது அங்கீகரிக்கப் பட்ட வரையறவில் பயன்படுத்தப்படாத தொகையாக, எஞ்சிய ரூபாய் 750 இலட்சம் அமைந்தது.

வங்கிகள் கொண்டிருந்த திறைசேரி உண்டியல்கள், 1965, செத்தெம்பர் 30ம் தேதிக் குரிய தொகையாகிய ரூபாய் 12338 இலட்சத்துடன் (94.9 சதவீதம்) ஒப்பிடுகையில் 1966 செத்தெம்பர் முடிவில் ரூபாய் 13693 இலட்சமாக (வெளிநின்ற தொகையில் 96.1 சத வீதம்) இருந்தன. இம்மொத்தத்தில் மத்திய வங்கி கொண்டிருந்த திறைசேரி உண்டி யல்களை, 1965, செத்தெம்பர் 30ஆந் தேதிக்குரிய 11065 இலட்சம் ரூபாய்களுடன் (85.1 சதவீதம்) ஒப்பிடுகையில் 1966, செத்தெம்பர் முடிவில் 12579 இலட்சம் ரூபாய்களாக (வெளிநின்ற தொகையில் 88.3 சதவீதம்) இருந்தன.

வருடத்திற்கு 3.0 சதவீதமாக இருந்த திறைசேரி உண்டியல்களின் மீதான வட்டி விகிதத்தில் ஒரு மாற்றமுமேற்படவில்லை. திறைசேரி உண்டியல்களுக்கு மத்திய வங்கி அளித்த ஆதரவு வட்டி விகிதம் நிதி வருடம் முழுவதும் வருடமொன்றிற்கு 1.0 சதவீத மாக இருந்தது.

### அந்நிய கடன்

மொத்த அந்நிய கடனுனது (அதாவது திருப்பிக் கொடுப்பனவுகளைக் கழித்தபின், ஆனுல் ஆழ் நிதிகள் உள்ளடங்க) 1964/65ல் காட்டிய ரூபாய் 771 இலட்சம் அதிகரிப்பு டன் ஒப்பிடுகையில் இவ்வருடம் ரூபாய் 596 இலட்சம் அதிகரிப்பைக் காட்டியுள்ளது. 1965/66றகரன அதிகரிப்பு கீழ்க்காணும் அட்டவணை 11 (உ) 14 இல் ஆயப்பட்டுள்ளது.

## அட்டவணை II (உ) 14

### அந்நிய கடன்கள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1965/66இல் ஏற்பட்ட அதிகரிப்பு | 1966, செத்தெம்பர் 30 இல் உள்ளபடியான பொறுப்பு |
|---|---|---|
| (அ) திட்டக் கடன்கள் | | |
| (i) உலக வங்கிக் கடன்கள் ... | – 1·2 | 138·5 |
| (ii) ஐக்கிய அமெரிக்க ஐ. சீ. எ. கடன் ... | 17·8 | 52·8 |
| (iii) சீனக் கடன்கள் ... | 9·7 | 50·2 |
| (iv) மேற்கு ஜேர்மனி (கிறடிற்றன் ஸ்டோல்ட் கடன்) ... | 5·5 | 24·7 |
| (v) ஸ்டேர்லிங் கடன்கள் ... | – 24·6 | 83·3† |
| (vi) ஐக்கிய அமெரிக்க ஏ. ஐ. டி. கடன் ... | 7·0 | 7·0 |
| (vii) ஐக்கிய அமெரிக்க டி. எஸ். டி. எல். எவ் கடன் ... | – 1·0 | 9·7 |
| (viii) கனடியகடன் ... | – 1·3 | 3·4 |
| (ix) கனடிய ஈ. சீ. ஐ. சீ. கடன் ... | 1·3 | 17·0 |
| (x) ஐக்கிய இராச்சியக் கொடுகடன் வசதி ... | – 0·7 | 20·1 |
| (xi) ஐக்கிய சோவியத் சோஷலிஸ்ட் குடியரசுக் கொடுகடன் வசதி ... | 9·3 | 92·3 |
| (xii) யூகோசிலேவியக் கொடுகடன் வசதி ... | 0·8 | 4·9 |
| (xiii) போலாந்துக் கொடுகடன் வசதி ... | 0·1 | 2·5 |
| (xiv) பிரான்சு எஸ். ஓ. சீ. ஈ. ஏ. கொடுகடன் ... | 1·6 | 7·1 |
| (ஆ) பொருளுதவிக் கடன்கள் ... | | |
| (1) கனடா ... | 2·4 | 2·4 |
| (2) ஐக்கிய இராச்சியம் ... | 18·9 | 18·9 |
| (3) மேற்கு ஜேர்மனி (கிறடிற்றன் ஸ்டோல்ட்) ... | 1·2 | 1·2 |
| (4) ஜப்பான் ... | 10·0 | 10·0 |
| (5) இந்தியா ... | 2·6 | 2·6 |
| மொத்தம் ... | 59·6 | 548·8 |

† அதாவது கடன் எடுப்பனவுகளிலிருந்து திருப்பிக் கொடுப்பனவுகளைக் கழித்து.

* ஸ்டேர்லிங் பிணைகளை மீட்பதற்காக வைத்திருந்த ஆழ்நிதிகள் 277 இலட்சம் ரூபாய்களாகும். இவ்வாழ்நிதிகளைக் கணக்கெடுப்பின் தேறிய பொறுப்பு 5211 இலட்சம் ரூபாய்களாகும்.

— அடையாளம் தேறிய திருப்பிக் கொடுப்பனவுகளைக் குறிக்கும்.

கீழ்த்தரப்பட்டிருக்கும் கடன்களுக்கான உடன்படிக்கைகள் ஏற்கனவே கைச்சாத்திடப்பட்டிருப்பினும், 1965/66ம் நிதி ஆண்டில் அவைகளைப் பொறுத்த மட்டில் ஒரு கடன் எடுப்புக்களும் செய்யப்படவில்லை.

| | | தொகை | உடன்படிக்கையின் திகதி |
|---|---|---|---|
| 1. பாங்கே டி பாரிஸ் (பிரான்ஸ்) கொடுகடன் வசதி | -ஸ்டேர்லிங் | 10,000,000 | 1.12.64 |
| 2. ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுக் கொடுகடன் வசதி (கிழக்கு ஜெர்மனி) | -,, | 15,000,000 | 2.2.65 |
| 3. கட்டுநாயக்கா விருத்தித்திட்டத்திற்கான கனடாக் கடன் | -கனடா டொலர் | 1,500,000 | 22.3.66 |
| 4. ஐக்கிய இராச்சிய/இலங்கை பொருளுதவிக் கடன் 1966 | -ஸ்டேர்லிங் | 1,570,000 | 14.5.66 |
| 5. கிறடின்ஸ்டோல்ட் (மேற்கு ஜெர்மனி) கடன் * | டொய்ச் -மார்க்ஸ் | 18,000,000 | 30.6.66 |
| 6. கிறடின்ஸ்டோல்ட் (மேற்கு ஜெர்மனி) பொருளுதவிக் கடன் * | ,, | 25,000,000 | 20.8.66 |
| 7. பிரான்ஸ் பொருளுதவிக் கடன் | -பிராங்ஸ் | 40,000,000 | 31.8.66 |
| 8. ஜப்பான்/இலங்கை பொருளுதவிக் கடன் இல. 2-1966 | -யென் | 1,800,000,000 | 6.9.66 |
| 9. ஐக்கிய இராச்சியம்/இலங்கை பொருளுதவிக் கடன் இல. 2-1966 | - ஸ்டேர்லிங் | 2,000,000 | 26.9.66 |

*இக்கடன்கள் ஆயத்த உடன்படிக்கை தன்மைத்தாக அமைவன.

இக்கடன்கள் 1965/66 நிதி வருடத்தில் பயன்படுத்தப்படாதமைக்கான முக்கிய காரணங்கள் பின்வருமாறு:-

(அ) கொடுகடனைப் பயன்படுத்துவதற்குரிய ஒழுங்குமுறைகளை முடிவாக்குவதிலேற்பட்ட காலதாமதம்.

(ஆ) கடன் வழங்கும் நாடுகளே நேரடியாகக் கொடுப்பனவுகளைச் செய்யுமிடத்து, அக் கொடுப்பனவுகள் பற்றிய தகவல்களை அறிவிப்பதில் ஏற்பட்ட காலதாமதம். கனடாக் கடனிற்கு இவ்விளக்கம் விசேடமாகப் பொருந்தும்.

(இ) பொருளுதவிக் கடன்களைப் பொறுத்தமட்டில், விசேடமாக இயந்திரப் பொறிகளின் இறக்குமதிகள் விடயத்தில், இறக்குமதியாளர் இறக்குமதிக் கட்டளையைப் பிறப்பித்தலுக்கும், அக் கட்டளையை ஏற்றுமதியாளர் நிறைவேற்றுவதற்கும் இடையில் ஏற்படும் காலக்கழிவு.

**ஆழ்நிதிகள்**

நிதியாக்கம் பெற்ற பொதுப்படுகடனை மீட்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஆழ்நிதிகளின் சந்தைப்பெறுமானம் 1965/66ம் நிதியாண்டின் இறுதியில் ரூபாய் 4757 இலட்சமாக அமைந்து, நிதியாண்டின்போது ரூபாய் 627 இலட்சம் கொண்ட நிகர அதிகரிப்பைப் பிரதிபலித்தது. இவ்வதிகரிப்பு பெறப்பட்டவிதம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| ஆழ்நிதிக்கு உதவப்பட்ட தொகை | ரூபா 603 இலட்சம் | |
| ஆழ்நிதி முதலீடுகளின் மீதான வட்டி | ,, 166 ,, | |
| முதலீடுகளின் சந்தைப் பெறுமானத்திலேற்பட்ட பெறுமதியுயர்வு | ,, 42 ,, | ரூ. 811 இலட்சம் |

**கழிவு**

| | |
|---|---|
| கடன்களின் திருப்பிக் கொடுப்பனவுகளுக்காக ஆழ்நிதியிலிருந்து எடுக்கப்பட்ட தொகை | ரூ. 183 ,, |
| தேறிய அதிகரிப்பு | ரூ. 627 ,, |

**அரசாங்க ஆதிக்கமுள்ள நிலையங்களின் கடன்பாடுகள்**

எல்லா நிதிவளங்களையும் அரசாங்கத்தேவைகளுக்காக வழிப்படுத்துவதும், தேசிய வீடமைப்பு ஆணையாளருக்கு, இத் தாபனத்தின் தேவைகளைப் பொறுத்தும், அரசாங்க நிதி நிலைமையைப் பொறுத்தும் கடன் நிதிகளிலிருந்து கடன் வழங்க வேண்டும் என, அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறுவதுமான, கடந்த மூன்று நிதியாண்டுகளில் மத்திய வங்கி கடைப்பிடித்த அதே கொள்கையையே தொடர்ந்தும் கடைப்பிடித்தது.

**(1) தேசிய வீடமைப்புத் திணைக்களம்**

இவ்வாண்டில் தேசிய வீடமைப்புக் கடன் முறிகள் யாதாயினும் வெளியிடப்படவில்லை. எனவே ஆண்டிறுதியில் வெளியிடப்பட்டனவும், வெளி நின்றனவுமான தேசிய வீடமைப்புக் கடன் முறிகளது மொத்தம் ரூபாய் 750 இலட்சமாகவே இருந்தது. அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நேரடிக் கடன்கள் ரூபா 700 இலட்சத்திலிருந்து 1966 செத்தெம்பர் இறுதியில் ரூபா 900 இலட்சத்திற்கு அதிகரித்தன. எனவே இவ்வதிகரிப்பு இவ்வருடத்தில் ரூபாய் 200 இலட்சமாகும். பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மீதியான கடன் எடுப்பு ஆற்றல் ரூபாய் 500 இலட்சமாக இருந்தது. தேசிய வீடமைப்புக் கடன் முறிகளை மீட்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஆழ்நிதிகளின் பெறுமானம் ரூபா 325 இலட்சமாக இருந்தது.

(2) தேசிய ஈட்டு வங்கி

கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிதியாண்டின்போது தேசிய ஈட்டு வங்கிக் கடன் முறிகள் ஒன்றும் வெளியிடப்படவில்லை. வெளியிடப்பட்டவையும் வெளிநின்றவையு மான கடன் முறிகள், எனவே ரூபா 333 இலட்சமாகவே இருந்தன. ஈட்டு வங்கியின் தொழிற்பாடுகளின் பிரதான பங்கு, வங்கித் தொழில்முறை அளித்த மேலதிகப்பற்று வசதிகள் மூலமே நடாத்தப்பட்டது. தேசிய ஈட்டு வங்கியின் கடன் எடுத்தல் வரையறை ரூபா 30 இலட்சத்தால் ரூபா 706 இலட்சமாக உயர்த்தப்பட்டிருக்க, தேசிய ஈட்டு வங்கி அதிகாரச்சட்டத்தின் 73, 75, 84ம் பிரிவுகளின் கீழ் உத்தரவாதமளிக்கப்பட்ட மேலதிகப்பற்றுக்கள் நிதி வருட முடிவின்போது ரூபாய் 374 இலட்சமாக விளங்கி ரூபா 50 இலட்சம் அதிகரிப்பைக் காட்டின. வெளியிடப்பட்டனவும் வெளி நின்றனவுமாகிய கடன் முறிகள் ரூபா 333 இலட்சங்களாக இருந்த காரணத்தினால், கவனத்திற்கெடுத்துக் கொள்ளப்பட்ட இப்பகுதி இறுதியில், கடன் எடுத்தல் வரையறையில் பயன்படுத்தப்படாத மீதி எதனும் இருக்கவில்லை.

பகுதி ஆ—நிதி ஆண்டு 1966/67.

வரவு—செலவுத் திட்டம் 1966/67.

1966, செத்தெம்பர் 26ம் திகதியன்று பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டபடி, 1966/67ம் ஆண்டிற்கான வரவு, செலவுகளின் மூல மதிப்பீடுகள், கீழ் வரும் அட்டவணை 11 (உ) 15 இல் சுருக்கித் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை II (உ) 15**

வரவு-செலவுத்திட்ட மூலமதிப்பீடுகள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | | | |
|---|---|---|---|
| (அ) மீண்டுவரும் செலவு (வரக்குப்பணங்கள் 1,2,4,6, ஆகியன ) | ... | 2,082·0 | |
| 2½ சதவீதக் குறைச் செலவை நீக்கி* | ... | 49·8 | 2,032·7 |
| (ஆ) மூலதனச் செலவு (வாக்குப்பணங்கள் 3,5,7, ஆகியன) | ... | 761·7 | |
| 10 சதவீத குறைச்செலவை நீக்கி | ... | 76·2 | 685·5 |
| (இ) மொத்தச் செலவு (அ) + (ஆ) | ... | | 2,718·2 |
| (ஈ) அரசிறை (புதிய வரி வருவாய்களும் உட்பட) | ... | | 2,033·0 |
| (உ) வரவு செலவுத்திட்டப் பணக்குறை (இ)—(ஈ) | ... | | 685·2 |
| (ஊ) ஆழ்நிதி உதவு தொகைகளும், பொதுப்படு கடனின் நேரடித் திருப்பிக் கொடுப்பனவுகளும் நீக்கி | ... | | 109·0 |
| (எ) மதிப்பிடப்பட்ட தேறிய பணக்குறை | ... | | 576·2 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* ஆழ்நிதி உதவு தொகைகளையும் அரசிறையிலிருந்து செய்யப்பட்ட பொதுப்படு கடனின் நேரடித் திருப்பிக் கொடுப்பனவுகளையும் (ரூபா 1,090 இலட்சம்) மீண்டெழும் செலவிலிருந்து கழித்துப் பெறப்பட்ட தொகையாகிய ரூபா 19,730 இலட்சத்தில் 2½ சதவீதம்.

ரூபா 6,852 இலட்சம் கொண்ட வரவு செலவுத் திட்டம் பணக்குறைக்கு பின்வருமாறு நிதியீட்டம் செய்யப்படவுள்ளது :-

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | |
|---|---|
| (அ) உள்நாட்டு வங்கியல்லாக் கடன் பாடு | 325.0 |
| (ஆ) அந்நிய உதவி(திட்டம்) | 125.0 |
| (இ) நிர்வாகக் கடன் பாடு | 25.0 |
| (ஈ) இணைக்கிணை நிதிகள் (பொருளுதவி) | 150.0 |
| | 625.0 |

எனவே ரூபா 602 இலட்சம் கொண்ட குறை வங்கிக் கடன்பாடுகள் மூலம் நிதியீட்டப்படும்.

**அரசிறை:**

1966/67ம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட மொத்த அரசிறை (வரவு செலவுத் திட்டத்தில் வகுக்கப்பட்ட நடவடிக்கைகளின் தேறிய வரவாகிய ரூபா 750 இலட்சம் உட்பட) ரூபா 20,330 இலட்சமாகும். இது 1965/66க்குரிய உண்மையான (தற்காலிக) அரசிறையாகிய ரூபா 18,332 இலட்சத்துடன் ஒப்பிடற்பாலது. எனவே 1965/66க்குரிய உண்மையான (தற்காலிக) எண் தொகையுடன் ஒப்பிடுகையில், நடைமுறை நிதியாண்டின் வரவு செலவுத்திட்ட அரசிறை மதிப்பீடுகள் ரூபா 1,998 இலட்சம் கொண்ட அதிகரிப்பைக் காட்டுகின்றன.

சென்ற ஆண்டின் உண்மையான அரசிறைத் தொகைகளுக்கு மேலாக ஏற்பட்ட 1,998 இலட்ச ரூபாய் கொண்ட இவ்வதிகரிப்பு,பிரதானமாகச் சுங்கத் தீர்வைகள் (ரூபா 1,493 இலட்சம்), உள்ளூர் வரி (ரூபா 513 இலட்சம்), மின்சாரத்திணைக்களம் (ரூபா 135 இலட்சம்), வட்டியும், ஆண்டுத் தொகைகளும் (ரூபா 128 இலட்சம்) ஆகியனவற்றிலிருந்து எதிர்பார்க்கப்படும் கூடிய வருவாய்களை அடக்கும். இவ்வதிகரிப்புக் கூறுகளின் விளைவு, வருமானவரி (ரூபா 141 இலட்சம்) துறை, துறைமுகத் தீர்வைகள் (ரூபா 53 இலட்சம்) ஆகியவற்றில் எதிர்பார்க்கப்படும் வருமான வீழ்ச்சிகளினால் ஓரளவு தேற்றப்படுகின்றது.

1966/67ம் ஆண்டில் அரசிறைச் சேர்க்கைகளில் எதிர்பார்க்கப்படும் மிகப் பெரிய அதிகரிப்பு, தலைப்பு 1 இன்--சுங்கத் தீர்வைகள்--கீழேயே ஏற்படுமென மதிப்பிடப்பட்டிருக்கின்றது. இறக்குமதி வரிச் சேர்க்கைகள் ரூபா 1,243 இலட்சம் அதிகரிப்பையும், ஏற்றுமதி வரிகள் ரூபா 252 இலட்சம் கொண்ட அதிகரிப்பையும் காட்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. பருத்தி நெசவு நூல் ஆடைகள் முதலியன (ரூபா 138 இலட்சம்),மோட்டார் எண்ணெய்கள், திரவ எரி பொருள் (ரூபா 330 இலட்சம்),வளமாக்கிகள் (ரூபா 34 இலட்சம்),போக்கு வரத்துச் சாதனம் (ரூபா 115 இலட்சம்), சீனி (ரூபா 101 இலட்சம்) என்பவை மீதான இறக்குமதி வரிச் சேர்க்கைகள், இவ் இறக்குமதி வரி அதிகரிப்பிற்கு குறிப்பிட்டளவு உதவிபுரியுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஏற்றுமதி வரிச் சேர்க்கைகளைப் பொறுத்தமட்டில் முக்கியமான அதிகரிப்புக்கள் தேங்காய் எண்ணெ (ரூபா 141 இலட்சம்), இரப்பர் (ரூபா 40 இலட்சம்) ஆகியவற்றின் மீதேயே எதிர்பார்க்கப்படுகின்றது.

**புதிய வரிப் பிரேரணைகளும் ஏனைய அரசிறை நடவடிக்கைகளும் :**

வரவு செலவுத் திட்டத்தின் புதிய வரி பிரேரணைகளும், ஏனைய அரசிறை நடவடிக்கைகளும் அரசிறையை ரூபா 750 இலட்சத்தால் கூட்டுமெனவும், அரசாங்கச் செலவை ரூபா 250 இலட்சத்தால் குறைக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இப்பிரேரணைகளும், நடவடிக்கைகளும் பின்வருமாறு :-

| | பத்து இலட்சம் ரூபாய்களில் அரசிறை | செலவு |
|---|---|---|
| 1. இறக்குமதித் திர்வை மாற்றியமைத்தல் | + 15.0 | |
| 2. இறக்குமதிகளின் அளவில் ஏற்படும் அதிகரிப்பினால் இறக்குமதி வரிகளின் மூலம் பெறப்படும் அரசிறை அதிகரிப்பு | + 20.0 | |
| 3. மொத்த விற்பனை வரிகள் | + 30.0 | |
| 4. கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் (கூ. மொ. வி.) துணி இறக்குமதிகளின் மீதான இறக்குமதி உத்தரவுச் சீட்டுக் கட்டணம் | + 10.0 | |
| 5. மாவின் விலை அதிகரிப்பு | | —25.0 (குறைவு) |
| மொத்தம் | + 75.0 | -25.0 |

**இறக்குமதி வரிகள் :**

சுங்கத்தீர்வைகள் பற்றிய புதிய நடவடிக்கைகள் தற்போதைய சுங்கத்தீர்வை அமைப்பிலுள்ள குறைகளைப் பரிசீலனைசெய்ய நியமிக்கப்பட்ட ஒரு விசேட குழுவின் சிபாரிசுகளின் அடிப்படையிலேயே பிரதானமாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இக் குழுவின் சிபாரிசுகளுக்கிணங்க, வரவுசெலவுத் திட்டத்திற்கு முன்னராக இருந்த இறக்கு மதித் தீர்வைகளிலடங்கிய மூலப்பொருள் விடயங்கள் எல்லாவற்றின் மீதும் 30 சதவீத (பொது) ஒரேயளவு வரிவிகிதம் விதிக்கப்பட்டது.[1] இறக்குமதியாகும் மூலப்பொருட்கள், உள்நாட்டு மூலப்பொருட்களின் உபயோகத்தையும், வளர்ச்சியையும் தடைசெய்யும் என காணப்பட்ட இடமெல்லாம் இவ்விறக்குமதி வரிவிகிதம் உயர்வாக விதிக்கப்பட்டது. இத் தகைய ஒரே அளவான விகித விதிப்பின் விளைவால் சில விடயங்களின் மீதான வரி உயர்ந்தும், சிலவற்றின் வரி குறைந்தும் அமைந்தது.

மூலப்பொருட்கள், தொழிற்பொறி, சாதனங்கள், உறுப்புக்கள் மீது விதிக்கப்பட்டு வந்த சலுகை விகிதமாகிய 22 சதவீதம் (பொது), 10 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது.[2] பொருளாதாரத்தின் துரித வளர்ச்சிக்கு மிகவும் வேண்டிய அடிப்படைக் கைத்தொழில் கள் எல்லாவற்றினதும் வளர்ச்சிக்கு வேண்டிய ஊக்கத்தை அளிப்பதற்கே இப்படிச் செய்யப்பட்டது. இச்சலுகை ''அத்தியாவசிய கைத்தொழில்களுக்கு'' மாத்திரமே அமைய வேண்டுமெனவும் என்பதும் குறைந்த வரி விகிதத்தினை விதிக்கும் இப்புதிய தீர்வையின் ஒரு நிபந்தனையாகும். இறக்குமதித்தீர்வையில் இவ்விதப்பட்ட மாற்றங்களைக் கொண்டு வரும்கால், ஏற்றுமதி வர்த்தகத்தில் பங்குகொள்ளும் இறக்குமதி விடயங்கள் மீதான வரிகள் உயர்த்தப்படாவண்ணம் கவனம் செலுத்தப்பட்டிருக்கின்றது.

வரவு செலவுத்திட்டத்திற்கு முந்திய இறக்குமதித் தீர்வையானது, இறக்குமதிகளைத் தடைசெய்யும் வண்ணம் 200 சதவீதம் தொட்டு 300 சதவீதம் வரையுள்ள கூர்மையான இறக்குமதி வரி வீதங்களைக்கொண்ட பல விடயங்களைக் கொண்டிருந்தது. கடந்த சில ஆண்டுகளில் அமைக்கப்பெற்றுள்ள விரிவானதொரு இறக்குமதித் தொகைக் கட்டுப் பாட்டு முறையின் நிமித்தம் இவ்விதப்பட்ட உயர்ந்த வீதங்கள் தொடர்ந்தும் இருப்பது அநாவசியமாகிவிட்டது. எனவே சுங்கத்தீர்வையிலுள்ள சில பொருட்கள் தவிர்ந்த ஏனையவற்றின் மீதான வரிகள் ஆகக்கூடிய வரி விகிதம் 150 சதவீதம் (பொது)[3] ஆக அமையும் வண்ணம் குறைக்கப்பட்டுள்ளன. சில சந்தர்ப்பங்களில் மாத்திரம் உள்நாட்டு தொழிலிற்குப் பாதுகாப்பளிக்கும் முகமாகவும், ஆடம்பர அல்லது செலவதிகமுள்ள பொருட்களின் இறக்குமதிகளைத் தண்டிக்கும் முகமாகவும் இதனிலும் உயர்ந்த விகிதங் கள் தொடர்ந்தும் நடைமுறையிலிருந்து வரவிடப்பட்டுள்ளன.

சுங்கத்தீர்வையில் செய்யப்பட்ட ஏனைய மாற்றங்களில் வெண்ணெய், கற்பூரம், ''யீஸ்ட்'' திராவகங்கள், கைத்தொழில் ''ரஸ்க்'' முதலிய பொருட்களின் மீதான பெறு மான வரிக்குப் பதில் தொகை வரி விதிக்கப்பட்டதுமொன்றும். இப் பதிலீடு கடந்த நிதி யாண்டின் வரவு செலவுத்திட்ட நடவடிக்கைகளில் தொகை வரிக்குச் சாதகமாகக் காட்டப் பட்ட ஆதரவைத் தொடர்ந்தும் காட்டுவதாக அமைகின்றது.

சுங்கத்தீர்வையின் மேற்கூறப்பட்ட மாற்றங்களின் விளைவு, அரசிறையில் ரூபா 150 இலட்சம் கொண்டதோர் சிறு அதிகரிப்பாகும். 1966/67 நிதியாண்டின்போது இறக்கு மதித் தொகையில் அதிகரிப்பு மூலம் இறக்குமதி வரியிலிருந்து மேலும் ஒரு ரூ. 200 இலட்சம் கொண்ட தொகை எதிர்பார்க்கப்படுகின்றது.

---

1. 1966, யூலை 29ம் திகதி அரசாங்க வர்த்தமானி இல. 14706/4.
2. மேற்போன்றே.
3. மேற்போன்றே.

**(ii) பூதல் வரி :**

பூதல் வரிக்கான வரி விலக்கு வரையறையானது 20,000 ரூபாவிலிருந்து, 50,000 ரூபாவிற்கு குறைந்த வருமானமுள்ளோருக்கு நிவாரணமளிக்கும் முகமாக உயர்த்தப் பட்டது.[1] நாட்டிலுள்ள 50,000 ரூபாவிற்கு மேற்படாத சொத்துக்களின் மொத்தப் பெறு மானம் ரூபா 80 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தொகையில் ரூபா 60 இலட் சங்கள் அசைவற்ற சொத்துக்கள் வடிவில் அமைகின்ற காரணத்தினால், பூதல் வரிக் கொடுப்பனவுகளைப் பொறுத்தமட்டில் இது பெருமளவு கஷ்டங்களை, குறிப்பாக பெற்றோ ரிடமிருந்து பல பிள்ளைகள் சொத்தை வாரிசாகப் பெறுமிடத்து, விளைவிக்கின்ற காரணத் தாலேயே, இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

சொத்துக்களின் மதிப்பு ரூபா 50,000க்கு மேற்படுமிடத்து, பூதல் வரிக்குட்படும் முதல் வரித்தொகுதி இதுவரை இருந்தது போன்று 3 சதவீத வரியையுடைய ரூபா 20,000 இலிருந்து ரூபா 50,000 வரைக்குமான ஒரு தொகுதியாக மாற்றமின்றி நடைமுறையில் இருக்கும். எனினும் சொத்துக்களின் பெறுமானம் ரூபா 50,000 மேலாக சிறிதள வாகவே அமையின், இவ்விதப்பட்ட சந்தர்ப்பங்களில் உள்ளோர்க்கு நிவாரணம் அளிக்கும் முகமாக, பூதல்வரி செலுத்தப்பட்ட பின்னர் பெறப்படும் சொத்துக்களின் தேறிய மதிப்பு ரூபா 50,000க்குக் குறையாமல் இருக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்நடவடிக்கை களின் மூலம் விளையக்கூடிய அரசிறை நட்டம் ரூபா 150,000 அளவில் இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

கிராமப்புறங்களில் அமைந்திருக்கும் காணிகளின் மதிப்பை, 10 சதவீதத்தால் குறைத்து பூதல் வரி அறவிடும் முறை நீக்கம் செய்யப்பட்டு, பூதல் வரிக்கென இனிமேல் எல்லாக் காணிகளும் சந்தை வீதங்களில் மதிப்பிடப்படவிருக்கின்றன. இன்றைய கிராமப் புறச் சொத்துக்கள் பெரும்பாலும் திருந்திய பாதை வசதிகளைக் கொண்டிருப்பதன் நிமித் தமே இவ்விதம் செய்யப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கைகள் யாவும் அரசிறை மீது ஏற்படுத்தக்கூடிய தேறிய விளைவு பெரிதள வில் அமையாதென எதிர்பார்க்கப்படுகின்றது.

**(iii) மொத்த விற்பனை வரிகள்**

இதுவரை மொத்தவிற்பனை வரிக்குட்படாத ரூபா 100,000 க்குக் குறைந்த மொத்த விற்பனவுகளுடைய வியாபார முயற்சிகளும், பொருட்களும் தொடர்ந்தும் இவ்வரியிலி ருந்து விலக்கப்பட்டும், உற்பத்தித் தொழிலில்லா வியாபார முயற்சிகளிற்குரிய பொது வீதமாகிய ½ சதவீதம் 1 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டும் உள்ளது.[2] அஸ்பெஸ்ரஸ் தவிர்ந்த முள்ளுக்கம்பி, ஒட்டுப்பலகை, கட்டடப் பொருட்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் வியாபார முயற்சிகளுக்கான 3 சதவீதம் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும். ஏனைய உற்பத்திப் பொருட்கள் மீது 5 சதவீத வரி உற்பத்தி முடிவு நிலையில் இறுக்கப்படத்தக்க தாக விதிக்கப்பட்டுள்ளது.[3] இம் மாற்றங்களால் அரசாங்கத்திற்குக் கிட்டக்கூடிய மேலதிக அரசிறை ரூபா 300 இலட்சம் அளவில் அமையுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

**(iv) துணி இறக்குமதிகளின் மீதான உத்தரவுச் சீட்டுக் கட்டணம்**

துணி வியாபாரத்தில் தனியொரு இறக்குமதியாளராக கூட்டுறவு மொத்த வியாபா ரத்தாபனமே இருக்கவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் நிமித்தம் எல் லாத் துணி இறக்குமதிகளின் மீதும் 10 சதவீத இறக்குமதி உத்தரவுச் சீட்டுக்கட்டணம் விதிக்கப்பட்டுள்ளது.[4] இக் கட்டணத்தை கூ. மொ. வி. தாபனமே செலுத்தவிருப்

---

1. பூதல் வரி (திருத்தம்) முறி-முறி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
2. 1966, யூலை 29ம் தேதி அரசாங்க வர்த்தமானி இல. 14706/3.
3. மேற்போன்றே.
4. 1966 நவெம்பர் 1ம் தேதி அரசாங்க வர்த்தமானி இல. 14719/5

பினும், நுகர்வோருக்கு கூப்பனிற்கு விற்கும் துணியின் விலையை, அது உயரவிடாது பார்த்துக் கொள்ளும். நேரடிப் பாவிப்பாளர் உத்தரவுச்சீட்டுகளின் பேரில் இறக்குமதியாகும் சிறு அளவு துணி மேலும், இக் கட்டணம் செலுத்தப்படவேண்டும். இந்நடவடிக்கையினுல் எதிர்பார்க்கப்படும் மேலதிக அரசிறை ரூ 100 இலட்சமாகும்.

**மாவின் விலை அதிகரிப்பு**

மாவின் விலை இருத்தலுக்கு 5 சதத்தால் உயர்த்தப்பட்டது. மாவினது உலகவிலை உயர்வுகாரணமாக இவ்விலை அதிகரிப்பின் காலப்போது அதிகரித்திருந்த மாவின் விற்பனையின் மீதான ரூபா 120 இலட்சம் கொண்ட மானியத்தை, நீக்கும் முகமாகவே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் இதன் மூலம் தேறிய உணவு மானியத்தை 1965/66 ஆண்டுக்குரிய தொகையளவில் மட்டுப்படுத்தவும் முயற்சிக்கப்பட்டது. இந் நடவடிக்கையின் மூலம் எதிர்பார்க்கப்படும் ரூபா 250 இலட்சம் கூடுதலான அரசிறையானது தேறிய உணவு மானியத்தின் பேரிலான செலவைக் குறைக்கும்வண்ணம் அமையும்.

**(iv) அரசாங்கச் செலவு**

1966/67க்குரிய மொத்த வாக்களிக்கப்பட்ட செலவு ரூபா 28437 இலட்சம் ஆகும். இத்தொகையுள் மீண்டெழும் செலவு (1) (1, 2, 4, 6ம் வாக்குகள்) ரூபா 20820 இலட்சமாகவும், மூலதனச் செலவு (3, 5,7ம் வாக்குகள்) ரூபா 7617 இலட்சமாகவும் அமைந்தன. மீண்டெழும் செலவின் மீதான வழக்கமான $2\frac{1}{2}$ சதவீத குறை செலவையும், மூலதன வாக்குகள் மீதான 10 சதவீத குறை செலவையும் கணக்கெடுப்பின், வாக்களிக்கப்பட்ட மொத்தச் செலவு ரூபா 27182 இலட்சமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தொகை 1965/66க்கான உண்மையான (தற்காலிக) மொத்தச் செலவாகிய ரூபா 24830 இலட்சத்திலும், ரூபா 2352 இலட்சம் கூடுதலாக உள்ளது. இவ்வதிகரிப்பு மீண்டெழும் செலவுகள் பேரில் ரூபா 774 இலட்சம், அதிகரிப்பையும் மூலதனச் செலவின் பேரில் ரூபா 1578 இலட்சம் அதிகரிப்பையும் பிரதிபலிக்கின்றது.

**நடைமுறைச் செலவு**

மீண்டெழும் செலவின் மொத்தம் (1, 2, 4, 6ம் வாக்குகள்) ரூபா 20820 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தொகையிலிருந்து மீண்டெழுஞ் செலவின் கீழான மூலதன விடயங்களையும், ஆழ் நிதி உதவு தொகைகளுக்கான ஒதுக்கீடுகளையும் கழித்தபின் பெறப்படும் நடைமுறைச் செலவானது ரூபா 18918 இலட்சமாக அமைகின்றது. இதனை 1965-/66ம் ஆண்டின் உண்மையான (தற்காலிக) செலவாகிய ரூபா 17920 இலட்சத்துடன் ஒப்பிடலாம். 1965/66இற்குரிய உண்மையான (தற்காலிக) செலவுடன் ஒப்பிடும் பொழுது 1966/67 இல் காணப்படும் ரூபா 998 இலட்சம் கொண்ட நடைமுறைச் செலவு அதிகரிப்பிற்கு முக்கியமாக, பொருளாதாரச் சேவைகள் (ரூபா 224 இலட்சம்), தேறிய உணவு மானியம் (ரூபா 173 இலட்சம்), கல்வி (ரூபா 158 இலட்சம்), பொதுப்படு கடன் மீதான வட்டி (ரூபா 166 இலட்சம்), இளைப்பாறற் சம்பளங்கள் (ரூபா 150 இலட்சம்), நிர்வாகம் (ரூபா 139 இலட்சம்) ஆகிய செலவுகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்களே காரணமாகும்.

**மூலதனச் செலவு**

1966-67 மதிப்பீடுகளில் மூலதன வாக்குகளிற்காக ஒதுக்கப்பட்ட தொகையாகிய ரூபா 7617 இலட்சமானது (வாக்களிக்கப்பட்ட மொத்த செலவில் கிட்டத்தட்ட 27 சதவீதம்), இதுகாறும் ஆண்டொன்றிற்கு ஒதுக்கப்பட்ட தொகைகளுள் ஆகக்கூடியதாகவும், 1965/66 மூல மதிப்பீடுகளில் ஒதுக்கப்பட்ட தொகையிலும் ரூபா 1836 இலட்சம் அல்லது 32 சதவீதம் கூடியும் அமைந்துள்ளது. மேலும் கடந்த மூன்று வருடங்களாக, சராசரி 23 சதவீதமாக இருந்த மூலதன வாக்குகளின் குறை செலவை, பல்வேறு முட்டுக்கட்டைகள்

(1) ஆழ்நிதி உதவு தொகைகளும், அரசிறையிலிருந்து செய்யப்பட்ட பொதுப்படுகடன் நேரடித் திருப்பிக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கி,

நீக்கப்பட்டதன் காரணத்தினுல், இவ்வருடம் 10 சதவீதத்திற்குள் அடங்கச் செய்யலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இப் 10 சதவீத மூலதன வாக்குக் குறை செலவின் அடிப் படையிற்கூட 1966/67 மதிப்பீடுகளில் ஒதுக்கப்பட்டுள்ள மூலதனச் செலவு, ரூபா 6855 இலட்சமாக அமைந்து, வருடமொன்றிற்கு வாக்களிக்கப்பட்ட ஆகக்கூடிய செலவுத் தொகையாக விளங்குகின்றது. மீண்டெழும் செலவு வாக்குகளின் கீழான மூலதனச் செலவு விடயங்களையும் வரவுசெலவு திட்டத்திற்கப்பாற்பட்ட நிதிகளிலிருந்து செய்யப்பட்ட மூலதனச் செலவையும் கூட்டினுல், மொத்த மதிப்பிடப்பட்ட மூலதனச்செலவானது ரூபா 8184 இலட்சமாக (1) அமைகின்றது. இத்தொகை 1965/66க்குரிய மொத்த மதிப் பிடப்பட்ட மூலதனச் (ரூபா 6680 இலட்சம்) செலவிலும் ரூபா 1504 இலட்சம் கூடியும், 1965/66க்குரிய உண்மையான (தற்காலிக) (ரூபா 6324 இலட்சம்) மூலதனச் செலவிலும் ரூபா 1860 இலட்சம் கூடியும் அமைகின்றது.

**வரவு செலவுத்திட்டத்தில் தெரிவிக்கப்பட்ட ஏனைய நடவடிக்கைகள்:**

**(1) வரி ஆணைக்குழு**

ஒரு விரிவானதும், இணைக்கப்பட்டதுமான வரித்திட்டத்தை ஏற்படுத்தும் நோக்கத் துடன் வருமான நிர்ணயிப்பு, வரி ஊக்கங்கள் முதலியனபற்றிய ஏற்பாடுகளை முழுதா கப் பரிசீலனை செய்வதென 1965/66 வரவு செலவுத் திட்ட உரையில் செய்யப்பட்டிருந்த அறிவிப்பை ஒட்டி, அரசாங்கம் ஒரு வரி ஆணைக்குழுவை நியமிக்க முடிவுசெய்துள்ளது. (2) இவ்வரி ஆணைக்குழுவானது வரி ஊக்கங்களில் முழு அமைப்பைப் பரிசீலனைசெய்து, தகுந்த சிபாரிசுகளைச் செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ் ஆணைக்குழுவானது விரைவில் நியமிக்கப்பட இருக்கும் காரணத்தால், இவ்வருட வரவுசெலவுத் திட்டத்தில் வருமான வரி அமைப்பின்மீது ஒருவித மாற்றங்களையும் ஏற்படுத்தப் போவதில்லை என நிதி அமைச்சர் அறிவித்தார்.

**(2) சுங்கத் தீர்வைகளின் திருத்தம்:**

அண்மையில் அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட சுங்கத் தீர்வை ஆலோசனைச் சபை யுடன் கலந்தாலோசித்துச் செய்யப்படவிருக்கும் தீர்வைகள் யாவற்றினதும் பரிசீலனை ஒன்றின் நிமித்தம், வரவுசெலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட சுங்கத்தீர்வை பற்றிய மாற்றங்கள் யாவும் ஆயத்த ஏற்பாடுகள் தன்மைத்தனவாக அமைகின்றன.

**(3) அந்நிய முதலீடு**

தனியார் அந்நிய முதலீட்டை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் அரசாங்கமானது, 1966 மாச்சில், அந்நிய முதலீடுபற்றிய தனது கொள்கையை இட்டு ஓர் அறிக்கையை வெளியிட்டது. இப்புதிய கொள்கையின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

(அ) ஒரு முதலீடானது அங்கீகரிக்கப்பெறின் இலாபம், பங்கு இலாபங்கள் வட்டி ஆகியனவற்றை வெளிநாட்டிற்கு அனுப்பவும், போடப்பட்ட முதலை வேண்டிய போது திருப்பி வெளியே அனுப்பவும் அநுமதிக்கப்படும்.

(ஆ) அவசியமான முகாமையாளரும் தொழில் நுட்ப வேலையாட்களும் நாட்டுக்குள் கொண்டுவரப்படலாம். வேலைக்கமர்த்தப்பட்ட அந்நிய வேலையாட்களின் குடும்பங் களின் பராமரிப்பிற்கென நாட்டுக்கு வெளியே பணம் அனுப்ப அநுமதிக்கப்படும்.

(இ) வேலைக்கமர்த்தப்பட்ட அந்நியரின் சேமிப்புக்கள் இளைப்பாறும்போது வெளியே அனுப்பப்படலாம்.

---

(1) மூலதன வாக்குப் பணங்களிலிருந்து அறவிடப்படும் செலவின் மீதான 10 சதவீத குறை செலவை விட்டுக்கணித்தபின்.

(2) வரி விசாரணை ஆணைக்குழுவொன்று தற்போது நியமிக்கப்பட்டுள்ளது.

(ஈ) நியாயமான அளவு முதனுரிமைக் கொடுப்பனவுகளையும், தொழில் நுட்ப சேவைக் கட்டணங்கள் முதலியனவற்றையும் அனுப்ப அநுமதிக்கப்படும்.

(உ) அந்நிய முதலீட்டாளர்கள், நட்டஈடின்றிய தேசியமயமாக்கத்திலிருந்தும், பாரபட்ச மானவிதத்தில் நடாத்தப்படுவதிலிருந்தும், பாதுகாப்பு அளிக்கப்படுவார்கள்.

அந்நிய முதலீடு பற்றிய இப்புதுக் கொள்கையைத் தொடர்ந்து, இவ்வருடப்போது ஐக்கிய அமெரிக்கக் குடியரசுடன் முதலீட்டு உத்தரவாத உடன்படிக்கை ஒன்று கைச் சாத்திடப்பட்டது. இலங்கையில் அந்நிய முதலீட்டை ஊக்குவிப்பதற்கென ஜெர்மன் சமஷ்டிக் குடியரசுடன் (மேற்கு ஜெர்மனி) இன்னொரு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வுள்ளது.(1)

**(4) வெளிநாட்டு அனுப்பு தொகைகளின் மீதான தற்காலிகத் தடை தளர்த்தப்பட்டமை.**

அனுப்பு தொகைகளின் மீதான தற்காலிகத் தடையின் கீழ் தடைசெய்யப்பட்ட தொகைகளை, வெளிக் கொடுப்பனவுக் கஷ்டங்களைப் பொறுத்து அமைவதாக, 1966 இன் முதல் 5 மாதங்களில் மாதமொன்றிற்கு 10 இலட்சம் ரூபாய்ப்படியும், எஞ்சிய 7 மாதங் களில் மாதமொன்றிற்கு 35 இலட்சம் ரூபாப்படியும் அனுப்ப விடுவதென தான் உத் தேசித்திருப்பதாக நிதி அமைச்சர் அறிவித்தார். இவ்வடிப்படையில் மொத்த வெளி யீடானது 1965க்கான 60 இலட்சம் ரூபாய்களுக்கெதிராக 1966இல் 295 இலட்சம் ரூபாய் களாக அமையும். வழங்களின் நிலை சீர்திருத்தமடையும் பொழுது இத்தற்காலிகத் தடையை முற்றிலும் நீக்குவதற்கு முயற்சி எடுக்கப்படுமென்ற கொள்கையையும் அரசாங்கம் வெளியிட்டது.

**(5) உல்லாசப் பிரயாணத் தொழில்**

அரசாங்கம் உல்லாசப்பிரயாணத் தொழிலின் மூலம் பெருமளவு அந்நிய செலா வணியைச் சம்பாதிக்க எதிர்பார்க்கின்றது. இந்நோக்கத்திற்கு அமைய தற்போதுள்ள உல்லாசப் பிரயாண பணியகத்திற்குப் பதிலாக, உல்லாசப் பிரயாணிகள் பற்றிய அலுவல் களை சீர்செய்யவென ஓர் உல்லாசப் பிரயாணச் சபையையும் ஏற்படுத்தியுள்ளது. உல்லா சப் பிரயாணிகளுக்கென வசதிவாய்ந்த விடுதிச்சாலைகளை அமைப்பதற்கென ஒரு விடுதிச் சாலை கூட்டுத்தாபனத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு முறி பாராளுமன்றத்தால் அங்கி கரிக்கப்பட்டுள்ளது.(2)

**(6) துணி இறக்குமதிகள்**

துணி வியாபாரத்தில், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையமே தனியொரு இறக்கு மதியாளராக இருக்கவேண்டுமெனவும், இத்துணிகள் யாவும் விலைக்கட்டுப்பாட்டிற்குட் பட வேண்டும் எனவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

**(7) கொடுகடன் சேமிப்பு நிலையங்களின் மறு சீர்திருத்தம்**

(அ) நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் அந்நிய வங்கிகள் பயனளிக்கும் வித்ததில் பங்கெடுக்குமுகமாக, 1961ஆம் ஆண்டின் நிதிச் சட்டம் அந்நிய வங்கிகள் மேல் விதித்த தடைகளை அண்மையில் நீக்குவதென்ற சென்ற ஆண்டின் நோக்கத்தை, வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகள் மறுபடியும் கூறியுள்ளன.

(ஆ) மக்கள் வங்கி விசாரணை ஆணைக்குழுவின் சிபாரிசுகளை கவனத்திற்கொண்டு, மக்கள் வங்கிச் சட்டத்தினையும் அரசாங்கம் திருத்தியமைக்கும். மக்கள் வங்கியின் கடன் மீட்டற் திட்டமானது, அவ்வங்கி மேல் கடும் சுமையாக அமைவதால், இத் திட்டத்தை வங்கியிடமிருந்து எடுத்து, அதனை அமுலாக்குவதற்குக் கூடிய தகுதி வாய்ந்த இன்னொரு தாபனத்திடம் ஒப்படைக்க வேண்டுமென மக்கள் வங்கி விசாரணை ஆணைக்குழு செய்துள்ள சிபாரிசை, அரசாங்கம் கவனத்திற்கொண்டு ஆராய்கின்றது.

---

1. இவ்வுடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு உறுதி செய்வதற்காக இருக்கின்றது.
2. 1966ம் ஆண்டின் 14-ம் இலக்க விடுதிச்சாலை கூட்டுத்தாபன அதிகாரச்சட்டம்.

(இ) தபாற்கந்தோர் சேமிப்பு வங்கி, இலங்கைச் சேமிப்பு வங்கி, தேசிய சேமிப்பு இயக்கம் ஆகியவை ஒன்ருக இணைக்கப்பட்டு ஒரு தேசிய சேமிப்பு வங்கியொன்று ஏற்படுத்தப்படும் என, சென்ற வருட வரவுசெலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டிருந்த தன்படி இதற்கு வேண்டிய சட்டவாக்கத்தினை விரைவில் அரசாங்கம் மேற்கொள்ளும்.

(ஈ) இலங்கை வங்கியினை, அதன் தற்போதைய அரசாங்கத் தாபனமான நிலைக்கொப்பவும், பொருளாதார அபிவிருத்திக்கு நிதியீட்டுவதில் அதற்கு இருப்பதிலும் விரிவான பங்கைக் கொடுக்கவும், **1938**ம் ஆண்டின் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தில் வேண்டிய திருத்தத்தினைச் செய்வதற்கான ஒரு முறி, தற்போது தயாரிப்பில் உள்ளது.